# ஈரோடு மாநகராட்சி

# மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

## (திருவள்ளுவராண்டு 2042 ஆடித் திங்கள் 11-ஆம் நாள்)

2012-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 26–ஆம் தேதி (26.07.2012) வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

- - -

## கூட்ட நடவடிக்கைகள்

- **வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மரியாதைக்குரிய துணை மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட நன்றி தீர்மானம்.**

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் செயல்திறனை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு "மாண்புமிகு முதலமைச்சர் விருது" வழங்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிப்பு செய்தமைக்கு இம்மாமன்றம் தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது.

- **வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணை மேயர் மற்றும் மண்டலத் தலைவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

ஈரோடு மாநகர பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் வகையில், இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலக உபயோகத்திற்காக மாநகராட்சி அலுவலர்களிடம் உடனுக்குடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு சிம் கார்டுகள் வழங்கிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**118. வணக்கத்திற்குரிய மேயர் முன்மொழிய மரியாதைக்குரிய துணை மேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**
**வணக்கத்திற்குரிய மேயர் முன்மொழிய மரியாதைக்குரிய துணை மேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

## வ.எண். 1 முதல் 3 வரை 31.05.2012-ம் தேதிய அவசரக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்கள்

**1)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண்.28 வ.உ.சி பூங்கா தற்போது காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதனால் பூங்காவில் சமூக விரோதிகள் தவறான வகையில் பூங்காவை பயன்படுத்தி வருகின்றனர். எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு பூங்காவில் அனுமதி நேரத்தை மாலை 3.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை பயன்பாட்டில் விட இந்த நடப்பாண்டில் மாற்றம் செய்யக்கோரி 2-வது மண்டலகுழுத்தலைவர், ஈரோடு அவர்களால் வழங்கப்பட்ட கோரிக்கையை மாமன்றத்தின் பார்வைக்கும் பரிசீலினைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

சி1/834/12

**118.(அ) மறு பரிசீலனை செய்து மீண்டும் பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.**

**2)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2ற்குட்பட்ட பெரிய சேமூர் பகுதியில் உள்ள அலுவலகத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட மாநகராட்சி மண்டலம்-2 அலுவலகம் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் பணியாளர்கள் அதிகமாக உள்ளதால் அமர்வதற்கு போதிய இட வசதி

இல்லாத காரணத்தினால் புதிய கூடுதல் கட்டிடம் ( First Floor)ல் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.23.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

அனுமதி வழங்கலாம்.

**இ1/1529/12**

**119. அனுமதி வழங்கப்பட்டது.**

**3)** ஈரோடு மாநகராட்சி 25.10.2011 முதல் 4 மூன்றாம் நிலை நகராட்சிகள், 2 பேரூராட்சிகள், 5 ஊராட்சிகள் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு 60 வார்டுகள் 4 மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது. தற்போது ஈரோடு மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஈரோடு மாநகராட்சியில் மாநகரப் பொறியாளர் பணியிடம் 24.03.2012 முதல் காலியாக உள்ளது.

தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகள் 1996–ன்படி மாநகரப் பொறியாளர் பணியிடமானது கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

வகுப்பு – I

வகை – I

இனம் – I

மாநகரப் பொறியாளர் பணியிடத்தை மாநகராட்சி பணிவிதிகளின்படி பதவி உயர்வு மூலம் அல்லது அயற்பணி மூலம் நிரப்பலாம்.

ஈரோடு மாநகராட்சியில் தற்போது இரண்டு செயற் பொறியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

1. திரு. ஆர். சதாசிவம், செயற் பொறியாளர் (திட்டம்)
2. திரு. கே. ஆறுமுகம், செயற் பொறியாளர் (பணிகள்)

மேற்படி இருவரும் மாநகராட்சி பணி விதிகளின்படி பதவி உயர்வுக்கு தகுதி பெறவில்லை. எனவே ஒருங்கிணைக்கப்பட்ட ஈரோடு மாநகராட்சியில் பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவின் அத்தியாவசியப் பணிகள் பாதிக்கப்படாதவாறு காலியாக உள்ள மாநகரப் பொறியாளர் பணியிடத்தை அயற்பணியில் பூர்த்தி செய்து வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

ஒருங்கிணைக்கப்பட்ட ஈரோடு மாநகராட்சியின் வளர்ச்சி பணிகள் பாதிக்கப்படாதவாறு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக காலியாக உள்ள மாநகரப் பொறியாளர் பணியிடத்தை அயற்பணியில் பூர்த்தி செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றம் அனுமதிக்கலாம்.

**சி1/725/12**

**120. ஒத்திவைக்கப்பட்டது.**

**4)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண்.5ல் எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் சமுதாயக்கூடம் கட்டும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி (கிழக்கு) மேம்பாட்டு நிதி 2011-12ல் ரூ.19.00 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2075/11/அ3 நாள் 15.03.2012ல் நிர்வாக அனுமதி அளித்ததை தொடர்ந்து இப்பணிக்கு முதலாம் அழைப்பாக 18.04.2012ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது. இப்பணிக்கான டேவணித் தொகையை ஒப்பந்ததாரர் வங்கி சேமிப்பு பத்திரமாக மாநகராட்சி கருவூலகத்தில் செலுத்தியுள்ளார். எனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு-

திரு. சுந்தரராஜ் +4.92% மதிப்பீட்டை விட அதிகம்.

மேற்படி ஒப்பந்ததாரருக்கு இப்பணிக்கு ஏற்கனவே கொடுத்த விலை விகிதத்தை குறைத்து கொடுக்க இயலுமா என இவ்வலுவலக கடித எண். இ1/3734/11 நாள் 19.04.12ல் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 20.04.12ம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே கொடுத்த விலை விகிதத்தை குறைத்துக் கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்துக் கொடுத்த விலை விகிதத்தை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு-

திரு. சுந்தரராஜ் 0.01% மதிப்பீட்டை விட குறைவு.

பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு. சுந்தரராஜ் (0.01 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு) அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/3734/11**

**121. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5)** இம்மாநகராட்சி மண்டலம்-2ற்குட்பட்ட சம்பத் நகர் பகுதியில் எஸ்.ஜே.எஸ்.ஆர்.ஒய் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள மூன்று கடைகளை குத்தகைதாரர்களுக்கு 31.03.2012 வரை உரிமம் வழங்கப்பட்டிருந்தது. மேற்படி கடைகளுக்கு உரிமக்காலம் 31.03.2012 உடன் முடிவடைந்தும் சம்மந்தப்பட்ட உரிமதாரர்களால் உரிம நீடிப்பு வேண்டி விண்ணப்பிக்கப்படவில்லை. எனவே மாநகராட்சி சட்டவிதிகளின்படி கடையை பூட்டி சீல் வைக்கப்பட்டு மாநகராட்சி பொறுப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டது. எனவே மேற்படி கடைகளை பொது ஏலம் விட கீழ்கண்டுள்ளவாறு ஏல வைப்புத் தொகைகள் மற்றும் பொது ஏல நிபந்தனைகளை நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| இனம் | ஏல வைப்புத் தொகை (ஒவ்வொரு கடைக்கும்) | கூடுதல் வைப்புத் தொகை (ஒவ்வொரு கடைக்கும்) |
|---|---|---|
| சம்பத் நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி கடைகள் 1,2,3 | 10,000/- | 15,000/- |

மேலும் பொது ஏல அறிக்கை 2010-13ல் கண்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையே இவ்வினத்திற்கும் நிர்ணயம் செய்யலாம். மேற்படி நிபந்தனைகளுடன் கடைகளை பொது ஏலம் விட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்படி வணிக வளாகம் எஸ்.ஜே.எஸ்.ஆர்.ஒய் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளதால் சுயஉதவிக் குழுக்களுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யும் வகையில் பொது ஏலம் விட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**அ1/16080/07**

**122. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**6)** இம்மாநகராட்சிக்கு சொந்தமான காமராஜ் சாலை வணிக வளாகம் கடை எண்.16ற்கும், லூம்வோர்ல்டு வணிக வளாகம் கடை எண்.11ற்கும் கடந்த 06.06.2012 அன்று மறு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. மேற்படி ஏலத்தில் காமராஜ் சாலை கடை எண்.16ற்கு புதியதாக ஏல வைப்புத் தொகையோ, ஒப்பந்தப்புள்ளி தொகையோ எவரும் செலுத்த வில்லை. இக்கடைக்கு 18 முறை ஏலம் விடப்பட்டுள்ளது. இவற்றில் 15வது முறை நடைபெற்ற ஏலத்தில் திரு. கோபாலகிருஷ்ணன் என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.4250/-ற்கு கோரியுள்ளார். அதன்பின் நடைபெற்ற மற்ற ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளி தொகை ஏதும் வரப்பெறவில்லை. மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசு மதிப்பு ரூ.7120/-ற்கும் குறைவானது. ஆனால் அருகில் உள்ள கடைகளின் வாடகையை விட கூடுதலாகும். மேலும் இக்கடையை நடத்தி வந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிதிக்கழகம் செலுத்தி வந்த வாடகை ரூ.3240/-ஐ விட கூடுதலாகும். இக்கடையை அரசின் மதிப்பிற்கு ஏலம் கோர முன்வரவில்லை. இதனால் தொடர்ந்து ஏலம் விடப்படுவதல் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும் கடையை பயன்படுத்தாததால் பழுது ஏற்படுவதாலும் அருகில் உள்ள மற்றக் கடைகளுக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே மாநகராட்சிக்கு தொடர்ந்து ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு காமராஜ் கடை எண்.16ற்கான திரு. கோபாலகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4250/- ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

2. இம்மாநகராட்சி லூம் வோர்ல்டு வணிக வளாகம் கடை எண்.11ற்கு கடந்த 06.06.2012 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் வைப்புத் தொகை செலுத்த முன்வரவில்லை. ஆனால் பொது ஏலத்திற்கு இரண்டு நபர்கள் வைப்புத் தொகை செலுத்தி கலந்து கொண்டனர். அவர்களின் ஏலக்கேள்வி விபரம் பின்வருமாறு-

| வ. எண். | கடை எண். | ஏலக்கேள்விதாரர் பெயர் | உச்சக் கேள்வித் தொகை ரூ. | ஏற்கனவே செலுத்தி வந்த வாடகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 11 | திரு. டி. குணசேகரன் | 6550- | 4189- |
| 2. | - | திரு. சங்கர் | 6500- | - |

மேற்காணும் ஏலதாரர்களில் திரு. டி. குணசேகரன் என்பவர் கோரியுள்ள உச்சக்கேள்வி தொகை ரூ.6550/- ஏற்கனவே கடையை காலி செய்து விட்டுப்போன இராசிபுரம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் செலுத்தி வந்த வாடகையை விட கூடுதலாகும். எனவே உச்சக்கேள்வி கோரிய திரு. டி. குணசேகரன் என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.6550/-ஐ ஏற்று கொள்வது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

**அ1/16080/07**

**123. காமராஜ் சாலை வணிக வளாகக் கடை எண்.16க்கு உச்சகேள்வத் தொகை கோரியுள்ள திரு. கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டது.**
**லூம் வோல்டு வணிக வளாகம் கடை எண்.11க்கு உச்சகேள்வித் தொகை கோரியுள்ள திரு. டி. குணசேகரன் என்பவருக்கு ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டது. 54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜா. சபுராமாமின்ஹாஜ் ஆட்சேபனை செய்தார்.**

**7)** இம்மாநகராட்சியில் கணினி பிரிவிற்கு தேவையான Supply and delivery of network accessories to server for centralized data base பணிக்கு ரூ.6,71,370/-க்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 19.03.12ல் முன் அனுமதி அளித்ததை தொடர்ந்து 20.04.12ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு-

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் |
|---|---|---|
| 1. | M/s Kural Info technologies | Rs. 698231/- |
| 2. | Shanthi & Co | Rs. 718362/- |

இரு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளனர். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ரூ.698231/-க்கு கொடுத்துள்ள M/s Kural Info technologies, Erode நிறுவனத்தாருக்கு இவ்வலுவலக 23.04.12ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டை விட குறைத்து கொடுக்க கேட்கப்பட்டதில் மேற்கண்ட நிறுவனத்தார் தமது 07.06.12ம் தேதிய கடிதத்தில் மொத்த செலவினம் ரூ.671300/-க்கு மேற்படி பணியினை செய்து தருவதாக ஒப்புதல் தெரிவித்துள்ளனர். மேற்படி விலைவிகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவாக ரூ.671300/-க்கு கொடுத்துள்ள M/s Kural Info technologies, Erode நிறுவனத்தாரின் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளதாலும் மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/1481/12**

**124. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**8)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண்.25 இடையன்காட்டு வலசு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் புதியதாக கழிப்பிட வசதி செய்தல் பணிக்கு ரூ.14,00,000/-க்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2011-2012-ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து மூன்றாம் அழைப்பாக 06.06.2012 தேதியன்று இப்பணிக்கு

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. பணிக்கான டேவணித் தொகையை ஒப்பந்ததாரர் காசோலையாக மாநகராட்சி கருவூலகத்தில் செலுத்தியுள்ளார். எனவே பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு-

திரு. கே.ஏ. சண்முகம் - 14.04% மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட அதிகம்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல் 2012-13ன்படி தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பின்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு-

திரு. கே.ஏ. சண்முகம் - -0.07% 2012-2013-ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு.

மேற்படி பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. கே.ஏ. சண்முகம் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண். இ1/3734/2011 நாள் 08.06.2012ல் ஏற்கனவே கொடுத்த விலைவிகிதத்தை குறைத்து கொடுக்க இயலுமா என கேட்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 11.06.2012 தேதிய கடிதத்தில் தற்போது கட்டுமானப் பொருட்கள் மற்றும் ஆட்கூலி உயர்ந்து விட்டதால் ஏற்கனவே கொடுத்த விலைவிகிதத்தை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.ஏ.சண்முகம் அவர்களின் -0.07 சதவீதம் 2012-2013ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவாகவும் அசல் மதிப்பீடு தொகைக்கு மிகாமலும் உள்ளபடியால் ஒப்பந்தப்புள்ளி ஏற்கவும், மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று திரு. கே.ஏ. சண்முகம் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு திரு. கே.ஏ. சண்முகம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி -0.07 சதவீதம் 2012-2013ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவாகவும் அசல் மதிப்பீடு தொகைக்கு மிகாமலும் உள்ளபடியால் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதிக்கலாம் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/3734/11**

**125. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**9)** இம்மாநகராட்சி மைய அலுவலகத்தின் கணினி வரி வசூல் பிரிவில் உள்ள பணம் எண்ணும் இயந்திரம் அடிக்கடி பழுதடைந்து சரி செய்தும் இயங்காத நிலையில் உள்ளது. அதிகமாக வரி வசூல் செய்யப்படும் காலங்களில் தொகைகளை எண்ணுவதில் அதிக சிரமம் ஏற்படுவதை கருத்தில் கொண்டு இம்மாநகராட்சிக்கு உதிரி ரூபாய் நோட்டுகள் எண்ணும் இயந்திரங்களை அலுவலக பணிகளின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு-15ன் அனுமதியின் கீழ் வாங்குவதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ரூபாய் எண்ணும் இயந்திரம் ஒன்றின் விலை ரூ. |
|---|---|---|
| 1. | Standard Electronic Systems | 16000/- |
| 2. | Indsys | 16840/- |
| 3. | KSD Office needs | 17100/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக ரூ.16,000/-க்கு (ஒன்றின் விலை) கொடுத்துள்ள Standard Electronic Systems கோவை நிறுவனத்தாரின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்ததால் அதனை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு இரண்டு எண்ணிக்கை இயந்திரங்கள் பெறப்பட்டு பின்னர் பட்டியல் தொகை வழங்கப்பட்டது. அலுவலக பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி உதிரிநோட்கள் எண்ணும் இயந்திரங்கள் மாநகராட்சிகள் சட்டம் பிரிவு-15ன் கீழ் வாங்கப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பி4/2875/12**

**126. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**10)** துணை இயக்குநர், மருத்துவம், ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 169/அக/2012, நாள் 24.05.2012ல் காந்திஜி ரோடு மகப்பேறில்லத்தில் புதுப்பிக்கப்பட்ட அறுவை அரங்கில் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் மயக்க மருந்து மருத்துவர் இல்லாத காரணத்தால் மயக்க மருந்து மருத்துவரை வாடகை முறையில் அமர்த்திக் கொள்ள அனுமதியும், மதிப்பூதியம் வழங்க துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் கடிதம் ந.க.எண். 5306/ஆ1/2011-ஆ, நாள் 29.02.12ல் நிதியுதவி ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**எச்1/248/12**

**127. அனுமதி வழங்கப்பட்டது.**

**11)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் வால்வு பழுதுகளை சரி செய்ய 01.12.2011 முதல் 30.06.2012 வரை உள்ள காலத்திற்கு உத்தேச செலவினம் ரூ.4.80 இலட்சத்திற்கு இம்மாமன்றம் தனது தீர்மான எண்.226 நாள் 21.12.2011ல் அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. ஏ. செல்வராஜ் அவர்களின் 0.08 சதவீதம் குறைவு ஒப்பந்தப்புள்ளி இம்மாமன்ற தீர்மான எண்.252 நாள் 27.12.2011ல் ஏற்று கொள்ளப்பட்டதை தொடர்ந்து 29.12.2011ம் தேதி வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யும் பொருட்டு மதிப்பீட்டில் வகை செய்யப்பட்ட இனங்களைவ ிட கூடுதலாக பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் உடைப்புகளை சரி செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளதால் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக செலவினம் ஆகிறது. எனவே இதே ஒப்பந்தத்தின் மூலம் 30.06.12 வரை ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் கூடுதல் செலவினத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணியை தொடர்ந்து செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி இதே ஒப்பந்தத்தின் மூலம் 30.06.2012 வரை தொடர்ந்து செய்வதற்கும் மற்றும் அதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று செய்தமைக்கும் அனுமதி வழங்கலாம்.

**இ1/11652/11**

**128. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**12)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட காசிபாளையம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பாரதிபுரம், காசிபாளையம், விவேகானந்தன் நகர், கல்யாணசுந்தரம் வீதி, மலைக்கோவில் வீதி, இராமமூர்த்தி நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் 20 ஹெச்.பி. நீர்மின்மூழ்கி மோட்டார் பழுது பார்த்தல் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.46,000/-ற்கு 24.05.2011ம் தேதியில் தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-15ன் கீழ் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து 28.05.2012 அன்று தேதியில் உள்ளூர் விலைப்புள்ளி கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. திரு. ஏ. செல்வராஜ் | - | ரூ. | 45,540/- |
| 2. ஹரீஷ் இன்ஜினியரிங் | - | ரூ. | 51,700/- |
| 3. சன் ரீவைண்டிங் | - | ரூ. | 47,830/- |

எனவே பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்திருந்த திரு. ஏ. செல்வராஜ் அவர்களின் ரூ.45,540/- விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணி முடித்து தொகை வழங்கியதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.

**இ1/1716/12**

**129. பதிவு செய்யப்பட்டது.**

**13)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட ரங்கம்பாளையம் நீருந்து நிலையத்தில் 20 ஹெச்.பி. நீர்மின்மூழ்கி மோட்டார் பழுது பார்த்தல் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.28,000/-ற்கு 17.05.2012ம் தேதியில் தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-15ன் கீழ் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து 18.05.2012 அன்று தேதியில் உள்ளூர் விலைப்புள்ளி கீழ்கண்டவாறு பெறப்பட்டது.

1. திரு. ஏ. செல்வராஜ் - ரூ. 27,150/-
2. ஹரீஷ் இன்ஜினியரிங் - ரூ. 29,870/-
3. சன் ரீவைண்டிங் - ரூ. 28,480/-

எனவே பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்திருந்த திரு. ஏ. செல்வராஜ் அவர்களின் ரூ.27,150/- விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணி முடித்து தொகை வழங்கியதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.

**இ1/1681/12**

**130. பதிவு செய்யப்பட்டது.**

**14)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட வெண்டிபாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரேற்றும் 90 ஹெச்.பி. நீர்மின்மூழ்கி மோட்டார் பழுது பார்த்தல் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.76,000/-ற்கு 14.05.2012ம் தேதியில் தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-15ன் கீழ் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து 15.05.2012 அன்று தேதியில் உள்ளூர் விலைப்புள்ளி கீழ்கண்டவாறு பெறப்பட்டது.

1. திரு. ஏ. செல்வராஜ் - ரூ. 75,940/-
2. ஹரீஷ் இன்ஜினியரிங் - ரூ. 83,710/-
3. சன் ரீவைண்டிங் - ரூ. 79,740/-

எனவே பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்திருந்த திரு. ஏ. செல்வராஜ் அவர்களின் ரூ.75,940/- விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணி முடித்து தொகை வழங்கியதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.

**இ1/1647/12**

**131. பதிவு செய்யப்பட்டது.**

**15)** இம்மாநகராட்சி சிலம்பரான் குட்டை தினசரி சந்தைக்கு 06.06.12 அன்று நடைபெற்ற பொது ஏல/ஒப்பந்தப்புள்ளியில் ஏல வைப்புத்தொகை செலுத்த எவரும் முன்வரவில்லை. ஆனால் 12.04.2012 அன்று நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் திரு வி.சேகர் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கேள்வித்தொகையாக ரூ.1,29,990/-க்கு கோரியுள்ளார். அதன்பின் நடைபெற்ற மூன்று ஏலங்களில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் கோரவில்லை. மேற்படி ஏல இனத்தை தற்போது துறை வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் கீழ்க்கண்டுள்ளவாறு செலவினம் ஏற்படுகிறது.

| | |
|---|---|
| 2009-10 | 206166 |
| 2010-11 | 167850 |
| 2011-12 | 163466 |
| | 537482 |

| | | |
|---|---|---|
| மூன்றாண்டு சராசரி | ரூ. | 1,79,160 |
| **2012-2013-ம் ஆண்டு வசூல் எதிர்பார்ப்பு** | | |
| 4/2012 | ரூ. | 12414 |
| 5/2012 | ரூ. | 11999 |
| 2012-13 சராசரி வசூல் | | 12,200 |
| ஆண்டு வசூல் எதிர்பார்ப்பு | ரூ. | 1,46,400 |
| **செலவுகள்** | | |
| பணியாளர் ஊதியம் மாதம் 14985. | | |
| மேற்படி இனத்தின் மூலம் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவு | ரூ. | 2,46,820 |
| ஆண்டு ஒன்றுக்கு 14985x12 | ரூ. | 1,79,820 |
| தட்டணை புத்தகம் அச்சுக் கூலி ஆண்டு ஒன்றுக்கு | ரூ. | 67,000 |
| 2012-13 ஆண்டின் வசூல் எதிர்பார்ப்பு | ரூ. | 1,46,400 |
| | | ---------------- |
| மொத்த செலவு | ரூ. | 2,46,820 |
| கூடுதல் செலவு | ரூ. | 1,00,420 |
| | | ---------------- |

மேற்படி ஏல இனத்திற்கு மூன்று முறை ஏலம் விடப்பட்டு வந்துள்ளது. தொடர்ந்து துறை வசூல் பணி மேற்கொள்வதால் சந்தையின் வருவாயை விட செலவினம் கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி சந்தையின் ஒப்பந்தப்புள்ளிக் கேள்வியை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அ1/13600/09**

**132. மேற்படி இனத்திற்கு 3 முறை ஏலம் விடப்பட்டும் திரு. வி. சேகர் என்பவர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். ஆகவே திரு. வி. சேகர் என்பவர் கோரியுள்ள ஒப்பந்த கேள்வித் தொகையை ஏற்க தீர்மானிக்கப்பட்டது.**
**54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜா. சபுராமாமின்ஹாஜ் ஆட்சேபனை செய்தார்.**

**16)** ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் அனாதைகளாக சாலையோரங்களிலும், அரசு மருத்துவமனையிலும் மரணமடையும் நபர்களை அடக்கம் செய்ய எடுத்து செல்ல தற்போது டி.என்.01 ஜி 0695 மெடாடர் வாகனம் பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட வாகனம் பணியில் ஈடுபடுத்தப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. மேலும் அதிக பழுதுபட்டு கழிவு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தினை கழிவு செய்யவும் மற்றும் அதற்கு பதிலாக புதிய ஆம்புலன்ஸ் வாகனத்தை வாங்கி அனாதை பிரேத வாகனமாக பயன்படுத்திக் கொள்ளவும் அதற்குண்டாகும் உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/3306/12**

**133. அனுமதி வழங்கப்பட்டது.**

**17)** ஈரோடு மாநகராட்சியில் தெருவிளக்குகளை பராமரிக்க ஸ்கைலிப்ட் லேடர் தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் ஒரு எண்ணிக்கை பயன்பாட்டில் உள்ளது. மேலும் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி இயக்க திட்டம் (IUDM) 2011-2012ல் இரண்டு எண்ணிக்கை ஸ்கைலிப்ட் லேடர் தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் வாங்கப்பட உள்ளது.

தற்போதைய விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சியில் தெருவிளக்குகளை பராமரிக்க தெருவிளக்கு பிட்டிங்குகளை நீண்ட தொலைவு எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதால் அதற்கு ஒரு இலகுரக வாகனம் தேவைப்படுகிறது. எனவே தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு ஒரு எண்ணிக்கை இலகுரக வாகனம் (Light Motor Vehicle) வாங்கவும் அதற்குண்டாகும் உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/3305/12**

**134. அனுமதி வழங்கப்பட்டது.**

**18)** ஈரோடு மாவட்டத்தில் நடைபெறும் அனைத்து துறைப் பணிகள் குறித்து மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் 19.05.2012 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்ட நடவடிக்கையில் இராஜாஜிபுரம் இடத்தினை அப்பகுதி மக்களுக்கே வழங்க மாநகராட்சி மூலமாக தீர்மானம் நிறைவேற்ற மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இராஜாஜிபுரம் வார்டு-சி, பிளாக் எண்.14 நகரளவு எண்.34ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 40 சென்ட் பரப்புள்ள நிலத்தில் 98 குடும்பங்கள் பல வருடங்களாக குடியிருந்து வருகின்றனர். அரசாணை எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 25.02.2000ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலங்களில் குடிசைகள் மூலமாக ஏற்கனவே ஆக்கிரமிப்புகள் செய்து பல ஆண்டுகளாக இருக்குமேயானால் அத்தகைய நிலம், தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியத்திற்கு மட்டும் தேவையெனில் அவ்வாரியத்திற்கு மனை ஒன்றிற்கு ரூ.10,000/- என்ற சலுகை வீதத்தில் நில கிரயம் பெற்றுக் கொண்டு நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி வழங்கலாம் என உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் முடிவு செய்யலாம்.

**இ3/3271/12**

**135. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இராஜாஜிபுரம் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருபவர்களுக்கு சலுகை வீதத்தில் நிலக்கிரயம் பெற்றுக் கொண்டு நில உரிமை மாற்றம் செய்ய அரசின் அனுமதி பெற தீர்மானிக்கப்பட்டது.**
**54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜா. சபுராமாமின்ஹாஜ் ஆட்சேபனை செய்தார்.**

**19)** ஈரோடு மாநகராட்சியில் தலைமை நீரேற்று நிலையம் மேல்நிலை தொட்டிகள், அலுவலக கட்டிட இரவு காவலர் பணி, வ.உ.சி. பூங்கா பராமரிப்பு, வெண்டிபாளையம் உரக்கிடங்கு, பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் லிமிடெட் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் 25 பணியாளர்களின் ஒப்பந்தக்காலம் 31.07.2012ல் முடிவடைவதால், 01.08.2012 முதல் ஒப்பந்தக்காலத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீட்டித்து வழங்கவும் இதற்கான உத்தேச செலவினம் பிரதி மாதம் ரூ.3,65,000/- பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேலும் அரசால் அகவிலைப்படி உயர்வு செய்யப்படும் பொழுது அதற்கேற்ப ஊதியத்தினை வழங்கும்போது ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-
மாமன்றம் அனுமதிக்கலாம்.

**சி1/13888/06**

**136. அனுமதி வழங்கப்பட்டது.**

**20)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1ன் எல்லைக்குட்பட்ட இந்தியா மார்க்-2 வகை கைப்பம்புகள் மற்றும் சிறு மின்விசை மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 01.12.2011 முதல் 30.06.2012 வரை உள்ள காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.70 இலட்சத்திற்கு இம்மாமன்றம் தனது தீர்மானம் எண்.245 நாள் 27.12.2012ல் அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள் எஸ்.வி அண்டு கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து அன்னாரால் மேற்படி பழுதுகளை சரி செய்யும் பணி செய்யப்பட்டு வருகிறது. அதன்படி மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள இனங்களின் அளவுகளை விட கூடுதலான எண்ணிக்கையில் கை பம்பு மற்றும் சிறுமின் விசை பம்புகள் பழுதுகளை சரிசெய்தும் மற்றும் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்களை கொண்டு சரி செய்தும் பயன்பாட்டில் விட கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட கூடுதலாக செலவினம் ஆகிறது. எனவே இதே ஒப்பந்தத்தின் மூலம் அதே ஒப்பந்ததாரரைக் கொண்டு 30.06.2012 வரை ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் கூடுதல் செலவினத் தொகை ரூ.2.70 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. குடிநீர் பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியினை தொடர்ந்து மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி பணியினை அதே ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ம.எண்.128/11-12**

**137. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**21)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3ற்குட்பட்ட முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரியம் குடிநீர் திட்டத்திற்கான வெண்டிபாளையம் தலைமை நிலையத்தில் இயங்கி வரும் 90 ஹெச்.பி. நீர்மின் மூழ்கி மோட்டார் பழுது பார்த்தல் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.28,000/-ற்கு 22.03.2012ம் தேதியில் தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-15ன் கீழ் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து 22.03.2012 அன்று தேதியில் உள்ளூர் விலைப்புள்ளி கீழ்கண்டவாறு பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. திரு. த. அனந்தகுமார், ஈரோடு | - | ரூ.27,314/- |
| 2. திருவாளர் பவர் ரீவைண்டிங், ஈரோடு | - | ரூ.27,420/- |
| 3. திருவாளர் அபிராமி ரீவைண்டிங் ஒர்க்ஸ், ஈரோடு | - | ரூ.27,775/- |

எனவே பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்திருந்த திரு. ஏ. செல்வராஜ் அவர்களின் ரூ.27,314/- விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணி முடித்து தொகை வழங்கியதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.

**இ1/1234/12**

**138. பதிவு செய்யப்பட்டது.**

**22)** ஈரோடு மாநகராட்சியுடன் 25.10.2011 முதல் அருகிலுள்ள 11 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

தற்போதைய விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க ஈரோடு மாநகராட்சியால் மொத்தம் 7 எண்ணிக்கை குடிநீர் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் இருந்து வரும் மண்டலம்1-க்கு உட்பட்ட சூரியம்பாளையம் பகுதியில் அமைந்துள்ள குடிநீர் திட்டங்கள் பின்வருமாறு:-

1. சூரியம்பாளையம் கூட்டுக்குடிநீர் திட்டம் (CWSS to Suriampalayam RTP and 14 other habitations in 3 village Panchayats in Erode District.)
2. கொத்துக்காரன்புதூர் கூட்டுக் குடிநீர் திட்டம் (Kothukaranpudur CWSS)

மேற்கண்ட குடிநீர் திட்டங்களில் வரிசை எண்.1-ல் குறிப்பிடப்பட்டுள்ள சூரியம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் மாநகராட்சிக்குட்பட்ட சூரியம்பாளையம், கங்காபுரம், வில்லரசம்பட்டி மற்றும் எல்லப்பாளையம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வ.எண்.2-ல் குறிப்பிடப்பட்டுள்ள கொத்துக்காரன் புதூர் கூட்டுக் குடிநீர்திட்டம் மூலம் திண்டல், வில்லரசம்பட்டி, வீரப்பம்பாளையம் ஆகிய பகுதிகளுக்கும் மற்றும் பி.பெ.அக்ரஹாரம், சூரம்பட்டி மற்றும் காசிபாளையம் பகுதிகளில் சில இடங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது மேற்கண்ட இரண்டு எண்ணிக்கை குடிநீர் திட்டங்களும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருவதால் வழங்கப்படும் குடிநீருக்கு மாநகராட்சியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாதம் ஒன்றிற்கு சராசரியாக ரூ.7.00 இலட்சம் குடிநீர் கட்டணமாக செலுத்தப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட இரண்டு குடிநீர் திட்டங்களையும் மாநகராட்சியின் பராமரிப்பில் எடுத்துக் கொண்டால் மாநகராட்சிக்கு செலவினம் குறைய வாய்ப்புள்ளது. மேலும் மாநகராட்சியின் பராமரிப்பில் மேற்கண்ட குடிநீர் திட்டங்களை எடுத்துக் கொள்ளும் பொழுது தேவைப்படும் இடங்களுக்கு குடிநீர் விநியோகத்தை விரிவுபடுத்துதலும், பராமரித்தலும் எளிதாக அமையும்.

எனவே மேற்கண்ட இரண்டு குடிநீர் திட்டங்களையும் ஈரோடு மாநகராட்சியின் பராமரிப்பிற்கு வழங்க கேட்டு மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஈரோடு அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி இரண்டு திட்டங்களையும் மாநகராட்சியின் பராமரிப்பிற்கு வழங்க உரிய மாமன்றத் தீர்மானத்துடன் முன்மொழிவுகள் வழங்கக்கோரி மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம், ஈரோடு அவர்களின் கடிதம் எண்.கோ.நகராட்சி/ஈதிகவ/12, நாள் 10.05.12-ல் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

எனவே தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலிருந்து வரும் சூரியம்பாளையம் கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் கொத்துக்காரன் புதூர் கூட்டு குடிநீர் திட்டம் ஆகிய இரண்டு கூட்டு குடிநீர் திட்டங்களையும் இம்மாநகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலிருந்து வரும் மேற்கண்ட இரண்டு கூட்டு குடிநீர் திட்டங்களையும் இம்மாநகராட்சி பராமரிப்பில் எடுத்துக் கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ2/1921/12**

**139. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் இருந்து வரும் சூரியம்பாளையம் கூட்டு குடிநீர்த்திட்டம் மட்டும் இம்மாநகராட்சி பராமரிப்பில் எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**
**கொத்துக்காரன் புதூர் கூட்டு குடிநீர் திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் இருந்து இம்மாநகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ள தற்போதைய நிதிநிலைமையை கருத்தில் கொண்டு நிறுத்திவைக்கப்பட்டது.**

**23)** ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பீளமேடு இடத்தில் அமைக்க திருவாளர் ராம்கி இன்பராஸ்ரெக்ஸர் லிமிடெட், ஹைதராபாத் நிறுவனம் ரூ.18.23

கோடிக்கு வழங்கியதை மாமன்றம் தனது தீர்மானம் எண்.393 நாள் 29.03.12ல் அனுமதிக்கப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி துவக்கப்பட்டுள்ளது.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தேவையான 1) இடத்தின் தன்மை, 2) கட்டிட அமைப்பு, 3) சிவில், மெக்கானிக்கல் மற்றும் எலெக்ட்ரீகல் தொடர்பான பணிகளுக்கான வடிவமைத்தல் மற்றும் கட்டமைப்பு தொடர்பான பணிகளை மேற்கொள்ள தரப்பரிசோதனை செய்து தர அரசு பொறியியல் கல்லூரி, கோவை, திருச்சி, ஈரோடு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகளில் கோரப்பட்டதில் பி.எஸ்.ஜி பொறியியல் கல்லூரி தங்களால் மேற்கண்ட பணிகள் செய்ய இயலாது என்றும் மற்றும் கோவை அரசு பொறியியல் கல்லூரி அவர்கள் மேற்கண்ட பணிகளை செய்துதர ஒப்புக் கொண்டதுடன் அதற்கான கட்டணமாக மதிப்பீட்டில் 0.50 சதவீதம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, அவசர அவசியம் கருதி அரசு பொறியியல் கல்லூரி, கோவைக்கு சிப்பம்-5க்கான மூன்றாம் நபர் தர பரிசோதனை செய்ய கட்டணமாக மதிப்பீட்டில் 0.50 சதவீதம் வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. திட்டப்பணியின் அவசியம் கருதி மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இதற்கான செலவினத்தை பாதாள சாக்கடை நிதியிலிருந்து வழங்கலாம்.

**பா.சா.தி/6459/10**

**140. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**24)** ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்ட அன்றாட பணிகளை திட்டப்பொறியர் மற்றும் செயற்பொறியாளர்கள் மேற்பார்வையிட ஒப்பந்த அடிப்படையில் மாத வாடகைக்கு இலகுரக வாகனங்கள் மாமன்ற தீர்மானம் எண்.523 நாள் 29.08.11-ன்படி ரூ.18.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு மூன்று வாடகை வாகனங்கள் இயங்கி வந்தன. அதன்படி ஜூன் 2012 வரை ரூ.9,42,907/-க்கு செலவினம் ஏற்பட்டுள்ளது. இயங்கி வந்த வாகனங்களில் 2 வாகனங்கள் பல்வேறு காரணங்களால் வாகன உரிமையாளர்களால் திரும்ப பெற்றுக் கொள்ளப்பட்டன. தற்போது ஒரு வாகனம் மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது. இவ்வாகனத்தின் ஒப்பந்தக்காலம் வருகின்ற 14.09.12 உடன் முடிவடைகிறது. தற்போது பாதாள சாக்கடைத் திட்ட சிப்பம் 1,2,3 மற்றும் 5 ஆகிய நான்கிற்கான பணிகளும் நடைபெறுவதால் பொறியாளர்கள் பணிகளை மேற்பார்வையிட வேண்டிய அவசர அவசியத்தை முன்னிட்டு 19.06.12 தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டுள்ள விபரப்படி ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வந்துள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | வாகனம்-1க்கு மாதம்-1க்கு மதிப்பீட்டுத் தொகை | வாகனம்-1க்கு மாதம்-1க்கு வழங்கிய ஒப்பந்த மதிப்பீடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | மெசர்ஸ் எஸ்.பி.எஸ். டிராவல்ஸ், ஈரோடு | ரூ.28198/- | ரூ.27,937.50 | 0.94 சதவீதம் |

வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (-) 0.94 சதவீதம் குறைவாக இருப்பதால் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு ரூ.18.00 இலட்சத்திற்கு செப்டம்பர் 12 வரை ஏற்பட்டுள்ள செலவினம் ரூ.10.00 இலட்சம் ஆகும். ஆனால் தற்போது 1 ஆண்டு காலத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10.60 இலட்சம் ஆகும். எனவே கூடுதல் செலவினத் தொகை ரூ.2.60 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றம் ஏற்கலாம்.

**பா.சா.தி/21927/06**

**141. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.இராதாமணிபாரதி ஆட்சேபனை செய்தார்.**

**25)** இம்மாநகராட்சிக்கு சொந்தமான நேதாஜி சாலையில் உள்ள புதிய வணிக வளாகத்தில் உள்ள கடைகளை 28.06.2012 அன்று பொது ஏலம் விடப்பட்டது. மேற்படி ஏல நடவடிக்கைகள் விபரம் பின்வருமாறு:-

| வ.எண். | கடை எண் | ஏலதாரர் பெயர் | உச்ச கேள்வி | அரசு மதிப்பு |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 22 | திருமதி பி. மீனாட்சி | 6050 | 6028 |
| 2 | 31 | திரு விஷ்ணுவர்தன் | 6250 | 4340 |
| 3 | 32 | திருமதி அ.கற்பகம் | 3050 | 2865 |
| 4 | 41 | திரு ஆர். ராஜாகுமார் | 5700 | 10680 |

மேற்காணும் கடைகள் தவிர மீதம் உள்ள கடைகள் 18,49,51,52,63 மற்றும் 64 ஆகியவற்றிற்கு எவரும் ஏல வைப்புத்தொகை செலுத்த முன்வரவில்லை. மேலும் மேற்படி கடைகள் கட்டப்பட்டு 23.03.2010 முதல் ஏலம் விடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்படி கடைகளுக்கு தற்போது ஏல வைப்புத்தொகை செலுத்தி உச்சகேள்வி கோரியுள்ளனர். மேற்படி கடைகளில் வரிசை எண்.1,2,3 ஆகியவற்றின் ஏலதாரர் கேள்வி தொகை அரசு மதிப்பீட்டைவிட கூடுதலாக உள்ளது. வரிசை எண்.4-ல் உள்ள திரு ஆர்.ராஜாகுமார் என்பவரின் ஏலக்கேள்வி தொகையானது அரசு மதிப்பீட்டைவிட குறைவானதாகும். இக்கடைக்கு மேற்காணும் குத்தகைதாரர் ஏலவைப்புத் தொகை செலுத்தி நான்குமுறை ஏலம் கோரப்பட்டுள்ளது. மேற்படி ஏலத்தொகைக்கு மேல் கூடுதலான தொகைக்கு ஏலம் கோர முன்வரவில்லை. மேற்படி கடைகள் கட்டப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாக காலியாக உள்ளதால் கட்டிடம் பழுதடைந்து பாதிக்கும் வாய்ப்புள்ளது. மேலும் வணிக வளாக கட்டிடம் IDSMT திட்டத்தில் கடன் பெற்று கட்டப்பட்டுள்ளதாலும், கடைகள் காலியாக இருப்பதாலும் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. கடை எண்.41-ற்கு அரசு மதிப்பை விட கூடுதல் தொகைக்கு ஏலம் கோர யாரும் முன் வராத காரணத்தாலும், தொடர்ந்து மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஏலக்கேள்விகளை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) கடை எண். 22,31,32 ஆகியவற்றின் ஏலக்கேள்வி தொகையானது அரசு மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதால் ஏலக்கேள்வியை மாமன்றம் ஏற்கலாம்.
2) கடை எண். 41-ஐ வணிக வளாகம் கட்டப்பட்ட நாள் முதல் ஏலம் விடப்பட்டு ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாத நிலையில் கடந்த நான்குமுறை நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்டு கேள்விதாரர் ஏலக்கேள்வி கோரியுள்ளார். மேற்படி கடையை அரசு மதிப்பிற்கு ஏலம் கோர எவரும் முன்வராத நிலையில் மாநகராட்சிக்கு தொடர்ந்து ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு ஏலதாரரின் உச்ச கேள்வியை ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அ1/4834/06**

**142. நேதாஜி சாலையில் உள்ள புதிய வணிக வளாக கடை எண். 22,31,32 ஆகியவைகளுக்கு உச்ச ஏலக்கேள்விகள் கேட்டுள்ள திருமதி. பி. மீனாட்சி, திரு. விஷ்ணுவர்த்தன், திருமதி. அ. கற்பகம் ஆகியோருக்கு ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டது. கடை எண்.41க்கு மறு ஏலம் வைக்க தீர்மானிக்கப்பட்டது. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி, 54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜா. சபுராமாமின்ஹாஜ் ஆகியோர் ஆட்சேபனை செய்தார்கள்.**

**26)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-1ன் வைராபாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் சுத்த நீர் இறைக்கும் 270 குதிரைத்திறன் மோட்டார் யூனிட்-2ல் காயில் புகைந்து பழுது ஏற்பட்டது. இதனால் குடிநீர் நீரேற்றம் செய்வது பாதிக்கப்பட்டது. எனவே குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியத்தை கருதி மேற்படி மோட்டாரின் பழுது நீக்கும் பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு இப்பணிக்காக பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு-

1. கோரல் ரீவைண்டிங் இந்தியா (பி) லிட், ஈரோடு - ரூ. 2,09,000/-
2. குவாலிட்டி கன்ட்ரோல் சிஸ்டம், ஈரோடு - ரூ. 2,12,000/-
3. E N A ரீவைண்டிங் ஓர்க்ஸ், ஈரோடு - ரூ. 2,20,000/-

சட்டம் பிரிவு-15ன் கீழ் இப்பணி மேற்கொள்ளப்படுவதால் மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் வழங்கிய மெசர்ஸ் கோரல் ரீவைண்டிங் இந்தியா (பி) லிட், ஈரோடு நிறுவனத்தின் விலைப்புள்ளி ரூ.2,09,000/-ஐ ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான தொகை ரூ. 2,09,000/-ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ2/3133/12**

**143. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**27)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட நான்கு மண்டலங்களிலும் உள்ள தலைமை நீரேற்று நிலையம் மற்றும் மேல்நிலை தொட்டிகளிலிருந்து விநியோகிக்கப்படும் குடிநீரில் பிளீச்சிங் பவுடர் கிருமி நாசினியாகப் பயன்படுத்தப்படுகிறது. தற்போது பிளீச்சிங் பவுடரின் இருப்பு குறைவாக உள்ளதால் நான்கு மண்டலங்களிலும் குடிநீரில் கிருமி நாசினியாக பயன்படுத்தத் தேவைப்படும் 50 டன் பிளீச்சிங் பவுடரை அரசு நிறுவனமான சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.10.75 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ2/3485/12**

**144. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**28)** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் சாலைப் பாதுகாப்பு குழுக்கூட்டம் 30.05.2012ம் தேதி நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் ஸ்வஸ்திக் சந்திப்பில் சத்தி சாலையில் உள்ள மின் மாற்றியை இருக்குமிடத்திலிருந்து 10 அடி ஓரமாக தள்ளி அமைத்தால் போக்குவரத்து சீராக செல்லும் என்றும் மாநகராட்சி ஆணையாளர் இது குறித்து நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. சத்தி சாலையில் உள்ள 3 மின் மாற்றிகளை (Transformer) மாற்றியமைப்பதற்கு உரிய மதிப்பீடு தயாரித்து கொடுக்குமாறு மின்வாரியத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டது. மேற்படி 3 மின்மாற்றிகளை மாற்றியமைக்க ரூ.7,79,560/- ஆகும் என மதிப்பீடு தயாரித்து உதவி மின் பொறியாளர் மின்சார வாரியம் 05.07.2012ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். மேற்படி மின்மாற்றிகளை மாற்றியமைக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.7,79,560/- மின்சார வாரியத்திற்கு செலுத்த மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

சத்தி ரோட்டில் உள்ள 3 மின் மாற்றிகளை மாற்றியமைக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.7,79,560/- செலுத்த மாமன்றம் முடிவு செய்யலாம்.

**இ5/5709/11**

**145. சத்தி சாலையில் உள்ள 3 மின்மாற்றிகளை மாற்றியமைக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகையை மின்சார வாரியத்திற்கு செலுத்தி மேல் நடவடிக்கைத் தொடர தீர்மானிக்கப்பட்டது.**

**29)** ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம் பகுதி விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 (Detailed Development Plan No.2)ல் பிரப்சாலையும், சென்னிமலை சாலையையும் (ரயில்வே ஸ்டேசன் ரோடு) இணைக்க சி.எஸ்.ஐ பள்ளி வளாகம், சிதம்பரம் காலனி, பெரியார் நகர், பெரும்பள்ளம் ஓடை, கரிமேடு மற்றும் சவானா ஹோட்டல் வளாகம் வழியாக 80 அடி திட்ட சாலை உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்ட சாலை அமைந்துள்ள விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 நகர் ஊரமைப்பு துறை ஆணையாளரால் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு ஆணையாளரிடமிருந்து மேற்படி திட்டத்திற்கு இறுதி ஒப்புதல் பெறும் பொருட்டு விரிவு அபிவிருத்தி திட்ட விதிகள் 13ன் படி பொதுமக்களிடம் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை கோரி ஈரோடு உள்ளூர் திட்டக் குழுவால் அறிவிக்கை செய்யப்பட்டது. இதற்கிடையில் தமிழ்நாடு அரசிதழ் எண்.27 நாள் 14.07.2010 ஈரோடு விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 தயாரிப்பது தொடர்பான மேற்படி அறிவிக்கையினை தடை செய்ய சி.எஸ்.ஐ நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றம் (W.P.No. 24415/2010) மற்றும் (M.P.No.2/2010) எண்ணில் மாவட்ட ஆட்சியர் ஈரோடு மற்றும் உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்டக் குழுமம் ஈரோடு ஆகியோரை பிரதிவாதியாக சேர்த்து 28.10.2010ம் தேதியில் இடைக்கால தடை உத்திரவு பெறப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது.

மாவட்ட ஆட்சியர் ஈரோடு அவர்களின் தலைமையில் 27.06.2012ம் தேதி நடைபெற்ற சாலை பாதுகாப்புக் கூட்டத்தில் ஈரோடு நகரப் பகுதியில் பி.எஸ். பார்க் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க பிரப்ரோடு - இரயில் நிலையம் ரோடு ஆகியவற்றை இணைக்கும் 80 அடி சாலை அரசுக்கு சொந்தமாக இருக்கும் இடங்களையும், ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் இடங்களையும் தனியாருக்குச் சொந்தமான இடங்களையும் இணைத்து சாலை அமைத்து அவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருதல் தொடர்பாக, நிலுவையில் உள்ள வழக்குகள் மீது பிரதிவாதியாக மாநகராட்சி தன்னை இணைத்துக் கொண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி

ஆணையரைக் கேட்டுக் கொள்ளப்பட்ட விவரம் மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. மேலும் இம்மாமன்றத் தீர்மானம் எண்.345 நாள் 29.03.12ல் போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி 80 அடி திட்டசாலையை விரைவில் அமைப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்ள தீர்மானித்துள்ளது.

அலுவலகக் குறிப்பு-

1. சென்னை உயர்நீதி மன்றத்தில் (W.P.No.24415/2010) மற்றும் (M.P.No.2/2010)ல் நடைபெறும் வழக்கில் மாநகராட்சியும் இணைந்து கொள்ள (Impleading petition) தாக்கல் செய்யலாம்.

2. மேற்படி வழக்கிற்கு ஆகும் செலவுத் தொகையினையும் மாமன்றம் ஏற்கலாம்.

**இ5/5709/11**

**146. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**30)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண்.8ல் மல்லி நகர் மற்றும் நெசவாளர் பாலனி பகுதிகளில் வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணைமேயர் மற்றும் மாநகராட்சி ஆணையர் அவர்கள் ஆகியோர் நேராய்வு செய்தனர். அப்போது அப்பகுதி மக்கள் அங்கு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சிறுபாலம் உயரம் மற்றும் அகலம் குறைவாக உள்ளதால் வடிகால் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் தேங்கி நின்று விடுகிறது எனவும், இதனால் துர்நாற்றம் ஏற்படுவதாகவும் மேலும் இப்பகுதி தாழ்வான பகுதியாக இருப்பதால் மழைக்காலங்களில் அதிகப்படியாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மழைநீர் புகுந்து விடுவதாக தெரிவித்தனர். அப்போது வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணைமேயர், மற்றும் மாநகராட்சி ஆணையர் அவர்கள் வழங்கிய அறிவுரைப்படி சிறுபாலத்தை உடைத்து அப்புறப்படுத்திவிட்டு வடிகாலினை உயர்த்திக் கட்ட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.8.00 லட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**1450/2012**

**147. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**31)** ஈரோடு மாநகராட்சியின் வைராபாளையம் தலைமை நீரேற்று நிலையத்தின் தொழிற்சாலை உரிமம் 2012ம் ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட வேண்டி மாமன்ற ஒப்புதலுடன் உரிமக் கட்டணம் ரூ.3900/- செலுத்தப்பட்டது. தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர், ஈரோடு அவர்களின் கடிதம் எண். ஆ/1613/12 நாள் 28.06.12ல் மேற்படி தொழிற்சாலை உரிமக் கட்டணம் கீழ்கண்டவாறு உயர்த்தி அரசாணை எண்.53 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை (எம்.ஆர்) நாள் 12.04.12ல் உத்திரவு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 500 HP LOWக்கு உரிமத் தொகை | ரூ. | 6000- |
| 30% சர்சார்ஜ் | ரூ. | 1800- |
| | | ------------- |
| | ரூ. | 7800- |

எனவே ஏற்கனவே செலுத்தப்பட்ட உரிமக் கட்டணம் ரூ.3900/- போக எஞ்சியுள்ள கட்டணம் ரூ.3900/-ஐ தொழிற்சாலைத் துணைத் தலைமை ஆய்வாளருக்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியத்தைக் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ2/8863/11**

**148. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**32)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 வார்டு எண்.41ல் ஈ.எம்.எம். பிள்ளை வீதி-3ல் வசிக்கும் (1) திரு. முத்துசாமி த/பெ திருமலை கவுண்டர் (2) செல்லம்மாள் க/பெ

டி. முத்துசாமி ஆகியோர் சொத்துவரி சம்பந்தமாக ஈரோடு மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண். ஓ.எஸ். நெ. 125/09.

மேற்படி வழக்கில் (16)ஆம் பிரதிவாதியாக ஆணையர் அவர்களை சேர்த்துள்ளனர்.

மேற்படி வழக்கில் ஈரோடு மாநகராட்சி சார்பில் வழக்கினை தொடர்ந்து நடத்திட திரு. எஸ். கனகசபாபதி அவர்களுக்கு வழக்கேற்பிதழ் வழங்கவும் மற்றும் வழக்கு தொடர்பாக ஏற்படும் செலவினங்களை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**அ1/2361/12**

**149. அனுமதி வழங்கப்பட்டது.**

**33)** 13-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. ராஜா அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.

- ஆர்.கே.வி நகர் பகுதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் பூங்கா அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஜெயகோபால் வீதியில் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் மூலம் குடிநீர் வழங்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**150. 13ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. ராஜா முன்மொழிய 15ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. க. அண்ணாமலை வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**34)** 26-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. செ. பாஸ்கர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.

- ❖ பரிமளம் காம்ப்ளக்ஸ் பின்புறம் அகில்மேடு வீதி-6ல் இருந்து சித்தனாதன் பில்டிங் வரை இருபுறமும் அகல சாக்கடை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ❖ கண்ணகி வீத உபசந்து, முனியப்பன் கோவில் பின்புறச் சந்து கான்கிரீட் தளம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ❖ காசியண்ண வீதி கடைசியில் தண்ணீர் டேங்கிலிருந்து சந்து வழியாக அகில்மேடு மெயின் வீதிக்கு ஆழ்குழாய் கொண்டு வர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ❖ காசியண்ண வீதிக்கும், அகில்மேடு வீதி மெயினிற்கும் இடையில் லைட் கம்பம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**151. 26ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. செ. பாஸ்கர் முன்மொழிய 32ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. வி.பி. இளங்கோ வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**35)** 27-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி மாமன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.

- கோட்டை தெப்பக்குளம் வீதியின் இருபுறமும் உள்ள சாக்கடையை உயரப்படுத்தி நடைபாதை (பிளாட்பாரம்) அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கோட்டை தெப்பக்குளம் வீதி ராஜ்மோகன் டெக்ஸ்டைல்ஸ் அருகே கல்வெர்ட் பாலத்தை உயர்த்தி கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- சீரங்க வீதி ___ தில்லை நகர் 6 அடி சாக்கடையின் மேல் கான்கிரீட் நடைபாதை அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- திருவள்ளுவர் குடிசைப்பகுதியில் பயனில்லாத ஆழ்குழாய் கிணற்றினை மூடி சிலாப் அமைத்து நடைபாதை ஏற்படுத்தி தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ( கனிமார்கெட்டில் ) நவீன குளியலறை வசதியுடன் கூடிய கழிப்பிடம் ஒன்றினை அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கனிமார்கெட் பகுதியில் புதிதாக 7 மின்கம்பங்கள் (சோலார்) அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**152. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி முன்மொழிய 45ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. என். விநாயகமூர்த்தி வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**36)** 28-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. சி.ஆர். நாச்சிமுத்து அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.

- ஏ.பி.டி ரோட்டில் மிலிட்டிரி லைனில் உள்ள மண் ரோட்டிற்கு பதிலாக கான்கிரீட் ரோடு அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஏ.பி.டி ரோட்டில் அமைந்துள்ள பொது கழிப்பறையில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**153. 31ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. என். சரஸ்வதி முன்மொழிய 34ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பி. பூமதி வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**37)** 30-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. கே. லட்சுமி அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.

- ராஜாஜிபுரத்தில் ஆழ்துளை கிணறு அமைத்து 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் குழாய் நீடிப்பு செய்து தெருவில் இரு பக்கங்களிலும் குடிநீர் கிடைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ராஜாஜிபுரம், காந்திபுரம் சந்திப்புகளில் கல்வெட்டு பாலம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- சுகாதார பணியாளர்களுக்கு புதியதாக 4 எண்ணிக்கை சைக்கிள் வண்டி வாங்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ராஜாஜிபுரத்தில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் சின்டெக்ஸ் டேங்க் பொருத்தி இருபுறமும் காரை வீதிகளுக்கு குடிநீர் குழாய் நீடிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ராஜாஜிபுரத்தில் அனைத்து பகுதிகளிலும் சாக்கடை சீர் அமைத்தும், புதிய சாக்கடை வசதி மற்றும் கான்கிரீட் பாலம் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**154. 30ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. கே. லட்சுமி முன்மொழிய 29ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பொ. ராமச்சந்திரன் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**38)** 45-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. நா. விநாயகமூர்த்தி அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.

- புதுமைக்காலனி சத்துணவு கூடத்திற்கு மின் இணைப்பு பெற இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- காமராஜர்புரம் (புதுமைக்காலனி) பகுதியில் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ள சமுதாயக் கூடத்திற்கு மின் இணைப்பு, சுற்றுச்சுவர், டைல்ஸ் தரைத்தளம் பணிகள் செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**155. 45ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. என். விநாயகமூர்த்தி முன்மொழிய 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**இடம்- ஈரோடு** **மேயர்,**

**நாள்- 01.08.2012** **ஈரோடு மாநகராட்சி**

# <u>ஈரோடு மாநகராட்சி</u>
# <u>மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்</u>
## <u>(திருவள்ளுவராண்டு 2042 ஆடித் திங்கள் 15-ஆம் நாள்)</u>

2012-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 30-ஆம் தேதி (30.07.2012) திங்கட் கிழமை காலை **11.30** மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

- - -

## <u>கூட்ட நடவடிக்கைகள்</u>

1. மரியாதைக்குரிய துணை மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.

- ஈரோடு மாநகராட்சியில் நவீன ஆடு, மாடு வதைக்கூடம் (Slaughter House) புதிதாக அமைக்க தீர்மானிக்கப்படுகிறது.
- தமயந்தி பாபுசேட் திருமண மண்டபத்திற்கு பழுதடைந்த பழைய பாத்திரங்களுக்கு பதிலாக புதிய பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கி வழங்கிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மாநகராட்சிக்கு உட்பட்ட பல இடங்களில் தெருவிளக்குகளின் தேவை அதிகமாக உள்ளபடியால் மாநகராட்சி பொதுநிதியிலிருந்து 900 புதிய தெருவிளக்குகள் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**156. மரியாதைக்குரிய துணை மேயர் முன்மொழிய வணக்கத்துக்குரிய மேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**2.** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் 27.06.2012ம் தேதி நடத்தப்பட்ட சாலைப்பாதுகாப்புக் குழு கூட்டத்தில் பன்னீர் செல்வம் பூங்காவிலிருந்து போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால் கனிமார்க்கெட் பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் பேருந்துகள் சாலையிலிருந்து விலகி உள்ளே சென்று பயணிகளை இறக்கி ஏற்றிச்செல்ல ஒரு வழியினை (Bay) ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளரைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பிரப்ரோட்டில் (மணிக்கூண்டு) செல்லும் பேருந்துகள் கனிமார்க்கெட் பகுதியில் உள்ளே சென்று வர சுமார் 20 அடி அகலம் கொண்ட இடம் தேவைப்படுகிறது. 20 அடி அகலத்தில் இடம் ஒதுக்கும் பொழுது அங்குள்ள 40 துணிக்கடைகளை வடபுறத்தில் உள்ள மார்க்கெட் வளாகத்தில் மாற்றி அமைக்க வேண்டும். கனி மார்க்கெட் குத்தகை காலம் மார்ச் 2013 முடிய உள்ளது. எனவே பேருந்துகள் உள்ளே சென்று வர கனிமார்க்கெட் பகுதியில் வழியினை (Bay) ஏற்படுத்த இட ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-
மாமன்றம் முடிவு செய்யலாம்.

**இ5/5709/11**

**157. தாராசா என்ற தனியார் கலந்தாலோசகர் மூலம் கனிமார்கெட்டில் புதிதாக கட்டிடம் கட்ட திட்ட அறிக்கை தயாரிப்பதால், அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் இது குறித்து பரிசீலனை செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

**3.** ஈரோடு மாநகராட்சி வார்டு எண்.29 கே.என்.கே ரோடு பின்புறத்தில் புதியதாக கழிப்பிடம் கட்டுவதற்கு திறந்தவெளியில் மலம் கழிப்பு ஒழிப்பு திட்டத்தின் கீழ் (Eradication of Open defecation) மாமன்ற தீர்மானம் எண்.307 நாள் 09.02.12ல் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இப்பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. எஸ். கோவிந்தராஜன் 0.02 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. ஒப்பந்தப்புள்ளியினை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கப்பட்டது. இப்பணியினை கே.என்.கே ரோடு பின்புற சந்தில் ஆரம்பிக்கப்பட்ட பொழுது, பணியினை மேற்கொள்வதற்கு அப்பகுதி பொதுமக்கள் மிக கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே இப்பணியினை அவ்விடத்தில் தொடர இயலாத சூழ்நிலை உள்ளது.

இப்பணியினை கே.என்.கே ரோடு பின்புறத்தில் கட்டுவதற்கு பதிலாக வார்டு எண்.21 குமலன்குட்டையில் கட்டுவதற்கும், ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த விகிதத்திலேயே பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியும், அரசு திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ம.எண்.189/11-12**

158. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**4.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட காசிபாளையம் 11, 12 பகுதிகள் அடங்கிய சிப்பம்-IV-க்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்க ரூ.26.79 கோடிக்கு 2008-09ஆம் ஆண்டு பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விலை பட்டியல் படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 12.11.2010ல் மூன்றாம் அழைப்பில் ஒப்பந்தம் கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

1. M/s.Ramky Infrastructrue Ltd – Abhiram Infra Projects Pvt Ltd-JV, Hyderabad.
2. M/s. DEE-TECH Projects Pvt Ltd., Chennai.
3. M/s. Anchor Ceramic, Chennai.
4. M/s.Nagarjuna construction company Ltd., Hyderabad.
5. M/s.APPL-SEW-JV, Hyderabad.

மேற்கண்டவாறு பெறப்பட்ட 5 ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதியை பரிசீலனை செய்து தக்க ஒப்புதல் பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அலுவலக தொழில்நுட்ப நிலை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட 5 ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதிகளை 27.11.2010ல் பரிசீலித்து கீழ்கண்ட 5 ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி கீழ்கண்டுள்ள நிறுவனங்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதம் பின்வருமாறு.

| வ.எண் | பெயர் | அளித்துள்ள விலை விகிதம் ரூ. | மதிப்பீட்டை விட அதிகம் |
|---|---|---|---|
| L-1 | M/s.Nagarjuna construction company Ltd., Hyderabad | 260847111.00 | (+) 20.15% |
| L-2 | M/s.APPL-SEW-JV, Hyderabad | 269106516.00 | (+) 23.66% |
| L-3 | M/s. Anchor Ceramic, Chennai | 275130668.00 | (+) 26.73% |
| L-4 | M/s. DEE-TECH Projects Pvt Ltd., Chennai | 282081391.00 | (+) 29.93% |
| L-5 | M/s.Ramky Infrastructrue Ltd – Abhiram Infra Projects Pvt Ltd-JV, Hyderabad | 300360870.00 | (+) 38.35% |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் நாகார்ஜூனா கன்ஸ்ரட்ஷன் கம்பெனி லிமிட்., ஹைதராபாத் நிறுவனத்தார் அவர்களிடம் விலை குறைப்பு செய்து தர கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வழங்கியுள்ளார்.

| கடித நாள் | விலை குறைப்புக்கு பின்னர் ஒப்பந்த தொகை | 2008-09ம் வருடத்திற்கு | 2010-11ம் வருடத்திற்கு |
|---|---|---|---|
| 11.2.2011 | 260253911.00 | 19.87% | 17.03% |
| 24.2.2011 | 257651372.00 | 18.60% | 15.86% |
| 12.5.2011 | 257007243.00 | 18.38% | 15.57% |

மேற்கண்ட விபரம் 25.11.2011ல் ஒப்பந்தப்புள்ளி நிலை குழுவின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டபோது மேற்படி குழு பிற மாநிலத்தில் கருப்பு பட்டியலில் உள்ள ஒப்பந்ததாரருக்கு நமது மாநிலத்தில் ஒப்பந்தம் வழங்கலாமா என்று அரசின் தெளிவுரை பெற தீர்மானித்தது. இதன்படி அரசு செயலர் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண்.பாசாதி/21927/06 நாள் 05.12.2011ல் கடிதம் எழுதி விபரம் கோரப்பட்டது.

இந்நிலையில் மேற்படி ஒப்பந்ததாரர் தனது ஒப்பந்தப்புள்ளி செல்லுபடியாகும் காலத்தினை 12.06.2012 வரை நீட்டிப்பு செய்து வழங்கி வந்தார். இறுதியாக நீட்டிப்பு செய்த காலம் 12.06.12ல் முடிவடைந்ததை தொடர்ந்து மேற்படி ஒப்பந்ததாரரிடம் மேலும் கால நீட்டிப்பு செய்து கொடுக்க இவ்வலுவலக கடித எண்.பாசாதி/21927/06 நாள் 06.06.2012, 19.06.2012, 23.06.2012 மற்றும்

02.07.2012ல் அறிவிப்புக் கடிதங்கள் அனுப்பியும், அன்னார் காலநீட்டிப்பு செய்து தரவில்லை. மாறாக 16.07.2012ந் தேதிய கடிதத்தில் கால நீட்டிப்பு செய்ய இயலாது எனவும் இதற்காக அளித்த வங்கி உத்திரவாதத்தை திரும்ப வழங்க வேண்டுமெனவும் தெரிவித்து விட்டதால் இதற்கடுத்த L-2 நிலையில் உள்ள திருவாளர் ஏ.ஐ.பி.பி.எல் - எஸ்இடபிள்யூ-ஜேவி, ஹைதராபாத் நிறுவனத்தாரிடம் இப்பணிக்கு குறைவான விலைவிகிதம் (L-1) வழங்கிய M/s.நாகர்ஜூனா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி, ஹைதராபாத் என்பவர் 18.38% (2008-09ம் ஆண்டு விலைப்பட்டியல்) விலை விகிதத்திற்கு மேற்கண்ட பணியை செய்ய இயலுமா? என்று கேட்கப்பட்டது.

அன்னார் தனது 17.07.12ம் தேதிய கடிதத்தில் இப்பணியை L-1 ஒப்பந்ததாரர் குறைத்து வழங்கிய சதவீதமான 18.38% க்கு தர இயலாது என்றும், L-1 ஒப்பந்ததாரர் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி சதவீதமான 20.15%க்கு செய்து கொடுப்பதாக சம்மதக் கடிதம் கொடுத்துள்ளார். எனவே இதன் மீது முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு-</u>**

1) மேற்கண்டப்பணி திட்டப்பணியாக இருப்பதாலும், உரிய காலத்தில் பணி முடிக்க வேண்டியிருப்பதாலும், எல்-1 ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி செல்லுபடி காலம் 12.06.12 உடன் முடிவடைந்து விட்டதாலும், எல்-1 ஒப்பந்ததாரர் 2008-09ன் விலை பட்டியல்படி குறைத்து வழங்கிய 18.38% சம்மதம் தர மறுத்தும், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள 20.15% செய்துதர சம்மதித்து விருப்பம் தெரிவித்திருப்பதால் இதனை மாமன்றம், நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி நிலைக்குழுவின் ஒப்புதல் பெற பரிந்துரை செய்யலாம்.
2) இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் கூடுதலாகும் தொகையினை அரசு மான்யம், நிதி நிறுவனக்கடன் பெறவும் அல்லது மாநகராட்சி நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**பா.சா.தி/21927/06/சிப்-4**

159. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி அவர்கள் ஆட்சேபனை செய்தார்.

**5.** ஈரோடு மாநகராட்சி ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 454 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு பயனாளிகள் வீடு கட்டுவதற்கு ஏதுவாக பணி உத்தரவு வழங்கப்பட்டது. இதில் 15 நபர்கள் 5 வருடமாக வீடு கட்டும் பணியை முடிக்காத காரணத்தினால் இவர்களுக்குப் பதில் மாற்றுப் பயனாளிகள் 15 நபர்களை தேர்வு செய்ய தீர்மான எண்.61 நாள் 10.05.12ன்படி மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு உள்ளது. தேர்வு செய்யப்பட்ட மாற்றுப் பயனாளிகள் விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-
அனுமதிக்கலாம்.

**இ3/379/12**

**<u>Alternative Beneficiary</u>**
**<u>IHSDP</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | ரவி த/பெ வெள்ளையன்,<br>63 ஜீவானந்தம் வீதி,<br>ரகுபதிநாயக்கன்பாளையம் | 2. | ராமன் த/பெ கருப்பன்<br>101 ஜீவானந்தம் வீதி,<br>ரகுபதிநாயக்கன்பாளையம். |
| 3. | செங்கோடன் த/பெ கருப்பன்<br>106ஜீவானந்தம் வீதி,<br>ரகுபதிநாயக்கன்பாளையம். | 4. | சௌந்தர்ராஜன் த/பெ சின்னக்குஞ்சு<br>111-1 ஜீவானந்தம் வீதி,<br>ரகுபதிநாயக்கன்பாளையம். |
| 5. | உலகுமணி க/பெ ராமையயாபிள்ளை<br>59 கே என் கே ரோடு,<br>ராஜாஜிபுரம் | 6. | அம்சவேணி க/பெ குருசாமி<br>34/1 கரட்டான்காடு,<br>வீரப்பம்பாளையம் |
| 7. | பெருமாள் த/பெ குருவன்<br>59 கரட்டான்காடு,<br>வீரப்பம்பாளையம் | 8. | கிருஷ்ணன் த/பெ பெருமாள்<br>13 ராஜாஜிபுரம் |
| 9. | சுப்பிரமணி த/பெ சுப்பன்<br>69 அடுக்குபாறை,<br>பெரியசேமூர், ஈரோடு | 10. | எஸ். ராஜீவ்காந்தி த/பெ செங்கோடன்<br>51/63 கரட்டான்காடு காலனி,<br>திண்டல், ஈரோடு |

| | | | |
|---|---|---|---|
| 11. | எம். லட்சுமி க/பெ மாதேஸ்வரன்<br>8 கரட்டான்காடு காலனி,<br>வீரப்பம்பாளையம்,<br>திண்டல், ஈரோடு | 12. | சி. சுரேஷ் த/பெ வி. செல்லதுரை<br>266/6 எம்.ஜி.ஆர் நகர்,<br>அணைக்கட்டு ரோடு,<br>சூரம்பட்டி வலசு, ஈரோடு |
| 13. | பஞ்சவர்ணம் க/பெ முருகதாஸ்<br>பெருமாள்மலை ஆர்.என். புதூர் | 14. | சாந்தி க/பெ செல்வராஜ்<br>பெருமாள்மலை ஆர்.என். புதூர் |
| 15. | பாஞ்சாலி க/பெ சந்திரன்,<br>மரபவாளையம், பெருமாள் மலை,<br>ஆர்.என். புதூர் | | |

160. அனுமதி வழங்கப்பட்டது.

**6.** அரசாணை எண். 204 நிர்வாகம் மற்றும் சீர்திருத்த துறை நாள் 21.06.93ல் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் ஓட்டுநர்கள் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் முழுமையாக பணி முடித்திருப்பவர்களுக்கு, பணிக்காலத்தில் எந்தவித விபத்துக்களும் இன்றி பணியை முடித்திருப்பவர்களுக்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் 10 ஆண்டுகள் பணியினை முடித்திருப்பவர்களுக்கு ரூ.500/-க்கான இந்திரவிகாஸ் பத்திரமும் 20 ஆண்டுகள் பணியை முடித்தவர்களுக்கு 4 கிராம் தங்கப் பதக்கம் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின்படி ஈரோடு மாநகராட்சியில் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் விபத்தின்றி பணியை முடித்திருப்பவர்களுக்கு எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர் அலுவலகம் சென்னையிலிருந்து 4 கிராம் தங்க நாணயம் வழங்க ஒருவருக்கு உத்தேச செலவினம் ரூ.15,000/- வீதம் மேற்கொள்ளவும் 10 ஆண்டுகள் பணியை முடித்துள்ளவர்களுக்கு ரூ.500/-க்கான இந்திரவிகாஸ் பத்திரம் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

அரசாணையில் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி எழுதுபொருள் அச்சகத்திலிருந்து 20 ஆண்டுகள் பணிமுடித்த தகுதியான ஒவ்வொரு நபருக்கும் 4 கிராம் தங்க நாணயம் வீதம் வழங்கவும் 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு ரூ.500/- மதிப்பிலான இந்திரவிகாஸ் பத்திரம் வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**சி1/3876/12**

161. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**7.** இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 கதவு எண்.59 மற்றும் 65 முதல் 67, தெப்பக்குளம் வீதியில் உள்ள சொத்திற்கு வரி மறு நிர்ணயம் செய்து நிலுவை தொகை செலுத்தக் கோரி கொடுக்கப்பட்ட அறிவிப்பினை எதிர்த்து திரு. ஓ. ரவிச்சந்திரன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் டபிள்.யூ.ப்பி 15315/12ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கினை மாநகராட்சி சார்பாக ஏற்று நடத்த வழக்கறிஞர் திரு. பி. ஸ்ரீநிவாஸ் அவர்களை நியமிக்கவும், மேற்படி வழக்கு தொடர்பாக ஏற்படும் செலவினத்தை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**அ1/4513/95**

162. அனுமதிக்கப்பட்டது.

**8.** ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.44-ல் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான உயர்கல்வி மற்றும் பொது நூலக கட்டிடத்தின் தரைத்தளத்தில் மாநகராட்சியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தமிழ் மற்றும் ஆங்கில தினசரி பத்திரிக்கைகள் மற்றும் வார, மாதாந்திர இதழ்கள் பயன்பாட்டில் உள்ளது.

தற்போது மாவட்ட ஆணைக்குழுவின் கீழ் இயங்கி வரும் ஈரோடு கிளை நூலகம் பழுதடைந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது எனவும் அக்கட்டிடம் எந்த நேரத்திலும் இடிந்து விடும் சூழ்நிலையில் உள்ளது என மாவட்ட நூலக அலுவலர்(பொ), ஈரோடு அவர்களின் ந.க.எண்.881/அ3/2012 நாள் 20.07.12 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஈரோடு நுகர்வோர் அமைப்பு மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் 12.01.12 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பெரியார் நகர் நூலகத்தில் செய்திதாள்கள் மட்டுமே உள்ளன. புத்தகங்கள் இல்லை. அதனால் நூலகரும் நியமிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஈரோடு நகர வாசகர்கள், படித்து வரும் மாணவ, மாணவியர்கள் மற்றும் நூல் வாசிப்பவர்களின் நலனை கருத்தில் கொண்டு இயங்கி வரும் பெரியார் நகர் நூலக கட்டிடத்தை ஈரோடு மாவட்ட நூலகத்திற்கு

இலவசமாக வழங்குமாறு மாவட்ட நூலக அலுவலர்(பொ), ஈரோடு அவர்களின் ந.க.எண்.881/அ3/2012 நாள் 20.07.12 கடிதத்தில் கேட்டுள்ளார்கள்.

எனவே மேற்படி நூல் வாசிப்பவர்கள் நலனை கருத்தில் கொண்டு தற்போது காலியாக இருந்து வரும் பெரியார் நகர் மாநகராட்சி நூலக கட்டிடத்தில் முதல் தளத்தை வாடகை அடிப்படையில் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**அ1/2432/12**

163. ஒத்திவைக்கப்பட்டது.

**9.** ஈரோடு மாநகராட்சி பேருந்து நிலையத்தில் 2 எண்ணிக்கை 16 மீ உயரம் கொண்ட உயர் கோபுர மின்விளக்குகள் மற்றும் 20 எண்ணிக்கை 400 வாட்ஸ் Flood light பிட்டிங்குகள் ஆகியவற்றை ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் பொருத்த 26.08.2010ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, 24.11.2010 தேதிய 795ம் எண் மாமன்ற தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஸ்ரீ பாரத் பைப் கார்ப்பரேஷன், ஈரோடு நிறுவனத்தினருக்கு 08.12.2010ம் தேதியன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு, ஒரு எண்ணிக்கை உயர்கோபுர மின்விளக்கு மற்றும் 20 எண்ணிக்கை 400 வாட்ஸ் Flood light பிட்டிங்குகள் பொருத்தப்பட்டது. மேற்கண்ட பணியில் ஒரு எண்ணிக்கை உயர் கோபுர மின்விளக்கு மட்டும் பொருத்தப்பட வேண்டியுள்ளது.

தற்போது ஒரு எண்ணிக்கை உயர்கோபுர மின்விளக்கு அமைக்க உத்தேசிக்கப்பட்டிருந்த மினிபேருந்து நிலையம் பகுதியில் போதுமான மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக 27.06.12-ம் தேதிய சாலை பாதுகாப்புக்குழு கூட்ட நடவடிக்கை கடித எண்.ப.வெ.2222/12/சி2 நாள் 06.07.12ல் இரவு நேரத்தில் போக்குவரத்து சீராக இயங்க வீரப்பன்சத்திரம் கோயில் அருகில் உயர்கோபுர மின்விளக்கு ஒன்று அமைக்க கேட்கப்பட்டுள்ளது. எனவே பேருந்து நிலையத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு எண்ணிக்கை 16மீ உயரம் கொண்ட உயர் கோபுர மின்விளக்கினை வீரப்பன்சத்திரம் கோயில் அருகே மேற்கண்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த அடிப்படையில் இடம் மாற்றி அமைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/7942/10**

164. அனுமதி வழங்கப்பட்டது.

**10.** ஈரோடு மாநகராட்சியில் பயன்பாட்டில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பதற்கு தேவைப்டும் மின் உதிரி பொருட்களை ரூ.30.00 இலட்சம் செலவில் வாங்கி பயன்படுத்த மாமன்ற தீர்மானம் எண்.58 நாள் 21.12.2011-ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் உதிரி பொருட்களை வாங்க 07.02.2012 மற்றும் 04.05.2012 தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உதிரி பொருட்கள் பெறப்பட்டன. தற்போது தேவைப்படும் உதிரிபொருட்களை ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க 20.07.2012 தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பெறப்பட்ட விபரம் பின்வருமாறு-

1. M/s Sri Magnum Agencies, Erode
2. M/s Reliant global green energy & Co, Coimbatore

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையை செலுத்தியுள்ளனர். மேலும் ஒப்பந்தப்புள்ளி தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கியுள்ளனர்.

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களும் வழங்கியுள்ள விலை விகிதங்கள் பின்வருமாறு-

| Sl. No. | Materials | Qty | M/s Sri Magnum Agencies, Erode | | M/s Reliant global green energy & Co, Coimbatore | |
|---|---|---|---|---|---|---|
| | | | Rate Rs. | Amount Rs. | Rate Rs. | Amount Rs. |
| 1. | 40w FTL Blub | 3000 | 44.00 | 1,32,000.00 | 44.50 | 1,33,500.00 |
| 2. | 40w FTL Chock | 700 | 214.00 | 1,49,800.00 | 215.00 | 1,50,500.00 |
| 3. | 40w Starter | 3000 | 9.00 | 27,000.00 | 9.50 | 28,500.00 |
| 4. | 40w Side Holder | 1000 | 9.00 | 9,000.00 | 10.00 | 10,000.00 |
| 5. | 36w CFL Blub | 200 | 168.00 | 33,600.00 | 169.00 | 33,800.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | 36w CFL Choke | 400 | 188.00 | 75,200.00 | 190.00 | 76,000.00 |
| 7. | 3/20 Al. wire | 30 | 387.00 | 11,610.00 | 393.00 | 11,790.00 |
| 8. | 24 watts T5 Blub | 300 | 148.00 | 44,400.00 | 150.00 | 45,000.00 |
| 9. | PVC insulation tape | 480 | 9.00 | 4,320.00 | 11.00 | 5,280.00 |
| | Total Rs. | | | 4,86,930.00 | | 4,94,370.00 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றன.

அலுவலகக் குறிப்பு-

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 1 முதல் 9 வரையிலான அனைத்து பொருட்களுக்கும் குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள M/s Sri Magnum Agencies, Erode நிறுவனத்தின் விலைவிகிதங்கள் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/11057/11**

165. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**11.** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான குமலன் குட்டை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள ஆர்.சி.சி. கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. எனவே அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.41000/-க்கு மாமன்றத்தின் அனுமதியும் அக்கட்டிடத்தினை மாநகராட்சி சொத்துப்பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதிக்கலாம்.

**இ1/3908/12**

166. அனுமதி வழங்கப்பட்டது.

**12.** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் பயிலும் இருபால் மாணவர்களின் ஆங்கிலப் பேச்சாற்றலை வளர்க்கும் பொருட்டு கீழ்கண்ட பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் (Spoken English) பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ளது.

| வ. எண். | பள்ளியின் பெயர் | 9ம் வகுப்பு | 11ம் வகுப்பு |
|---|---|---|---|
| 1. | ரயில்வே காலனி மேல்நிலைப்பள்ளி | 188 | 190 |
| 2. | கருங்கல்பாளையம் காவேரி ரோடு பெண்கள் மேல்நிலைப்பள்ளி | 193 | 153 |
| 3. | இடையன் காட்டு வலசு உயர்நிலைப்பள்ளி | 104 | - |
| 4. | காமராஜர் மேல்நிலைப்பள்ளி | 112 | 115 |
| | மொத்தம் | 597 | 458 |

மேற்படி ஆங்கில பேச்சாற்றல் (Spoken English) வகுப்பிற்கு கால அளவு 2 மாதங்களாகும். மற்றும் அதற்கான கட்டணம் ஒரு நபருக்கு சுமார் ரூ.350/-ஆகும்.

எனவே மேற்கண்ட மாநகராட்சிபள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளில் பரிட்சார்த்த முறையில் முதல் கட்டமாக கருங்கல்பாளையம் காவேரிரோடு பெண்கள் மேல்நிலை பள்ளியில் பயிலும் 9ம் வகுப்பு மாணவிகள் 193 பேருக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் (Spoken English) பயிற்சி வழங்கவும் அதற்காகும் செலவினம் ரூ.70000/-க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி பயிற்சிக்கு பிறகு பயிற்சி பெற்ற மாணவிகளின் செயலாக்கத்தின் (Performance) அடிப்படையில் எஞ்சியுள்ள பள்ளி மாணவ மாணவிகளுக்கும் ஆங்கிலப் பேச்சாற்றல் (Spoken English) பயிற்சி வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/3933/12**

167. அனுமதி வழங்கப்பட்டது.

**13.** ஈரோடு மாநகராட்சியின் நான்கு மண்டல அலுவலகங்கள் மற்றும் கணினி வசூல் மையங்களில் பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகளில் குறைந்த வேகம் மற்றும் நினைவுத்திறன் கொண்டவை. தற்போது மேற்படி அலுவலகங்கள் மற்றும் வரி வசூல் மையங்கள் மாநகராட்சி மைய அலுவலகத்திலுள்ள Server-ல் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி பணிகள் இடையூறின்றியும் வேகமாகவும் நடைபெறுவதற்கு தற்போதுள்ள கணினிகள் போதுமானதாக இல்லை. மேலும் மைய அலுவலக Server-ன் வேகத்திற்கு ஈடு செய்ய தற்போதுள்ள கணினிகள் கூடுதல் நேரம் எடுத்துக் கொள்கின்றன. எனவே அனைத்து மண்டல அலுவலகங்கள் மற்றும் வரி வசூல் மையங்களுக்கு பயன்படும் விதமாக Latest configuration கொண்ட 20 எண்ணிக்கை கணினிகள் வாங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் இம்மாநகராட்சிக்குட்பட்ட கருங்கல்பாளையம் காவேரி ரோடு மகளில் மேல்நிலைப் பள்ளியில் கணினி பிரிவில் 11-ம் வகுப்பில் 144 மாணவிகளும், 12-ம் வகுப்பில் 94 மாணவிகளும் ஆக மொத்தம் 238 மாணவிகள் பயின்று வருகிறார்கள். தற்போது இப்பள்ளியில் 9 கணினிகள் மட்டுமே உள்ளதால் மாணவியர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு 20 கணினிகள் வாங்கி வழங்குமாறு இப்பள்ளி தலைமை ஆசிரியர் கோரியுள்ளார்.

எனவே இப்பள்ளி மாணவியர்களின் பயன்பாட்டிற்கு 20 கணினிகள் அலுவலக பயன்பாட்டிற்கு 20 கணினிகளும் ஆக மொத்தம் 40 கணினிகள் DGS & D விலைவிகிதத்தில் நேரடியாக வாங்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.13,00,000/-க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் மற்றும் கருங்கல்பாளையம் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு வாங்கும் 20 கணினிகள் கல்வி நிதியிலும் மற்றும் அலுவலகப் பயன்பாட்டிற்கு வாங்கும் 20 கணினிகள் பொதுநிதியிலிருந்து வாங்கிக் கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/3934/12**

168. அனுமதி வழங்கப்பட்டது.

**14.** ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு ISO தரச்சான்று பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் ஈரோடு மாநகராட்சி 2012-13ம் ஆண்டுக்கான பட்ஜெட் உரையின் போது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்தினை ISO தரச்சான்று பெறுவதற்கு ஏதுவாக வணிக வளாகம் மற்றும் பயணிகள் தங்குமிடங்களுக்கு வர்ணம் பூசி (Wether Shield) மராமத்து மற்றும் அபிவிருத்திப் பணிகள் மூலம் புனரமைப்பு செய்வது அவசியமாக உள்ளது. எனவே அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.15.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதி வழங்கலாம்.

**இ1/2639/12**

169. அனுமதி வழங்கப்பட்டது.

**15.** 17-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.ஜி. பழனிசாமி அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.

- 17வது வார்டு பிச்சைக்காரன் பள்ளம் அருகில் உள்ள மயானத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்து, பராமரிப்பு பணிகள் செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

170. 17ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.ஜி. பழனிச்சாமி முன்மொழிய 16ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பி. முத்தான் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**இடம்- ஈரோடு** **மேயர்,**

**நாள்- 01.08.2012** **ஈரோடு மாநகராட்சி**

# ஈரோடு மாநகராட்சி

# சிறப்பு மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்

## (திருவள்ளுவராண்டு 2042 ஆடித் திங்கள் 15-ஆம் நாள்)

2012-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 30-ஆம் தேதி (30.07.2012) திங்கட் கிழமை பகல் 12.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற சிறப்பு மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

\- - -

## சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்

**1.** ஈரோடு மாநகராட்சியில் மின்சிக்கன நடவடிக்கைகள் தொடர்பான பணிகளை மேற்கொள்ள அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்பட்டதில் 31.05.2012ம் தேதிய 96ம் எண் மாமன்ற தீர்மானத்தில் கீழ்கண்டவாறு தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது.

"மாநகராட்சியின் நிதிநிலை சரியில்லாத காரணத்தாலும் தனியாருக்கு விடப்படும்போது அதிக செலவினங்கள் ஆகும் என மாமன்றம் கருதுவதாலும், தற்போது மாநகராட்சிக்குட்பட்ட மின்விளக்குகள் பழுது ஏற்படும் பொழுது அவ்வப்போது குழல் விளக்குகளுக்குப் பதிலாக எல்.இ.டி. மின்விளக்குகள் பொருத்தலாம் என மாமன்றம் தீர்மானிக்கிறது.

தற்போது மாநகராட்சி புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாநகராட்சியாக இருப்பதால், புதிதாக கிராமப்பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளது. அங்கு தேவையான இடங்களில் தெருவிளக்கு வசதி இல்லாத காரணத்தினால் அங்கு புதிதாக தெரு விளக்குகள் போட வேண்டியுள்ளது. ஆகவே புதிய இடங்களில் போடும் புதிய தெருவிளக்குகளுக்கு எல்.இ.டி பல்புகளை பயன்படுத்தலாம் எனவும், இப்பொருளை ரத்து செய்யலாம் எனவும் மாமன்றம் தீர்மானிக்கிறது."

எனவே தற்போது மேற்கண்ட தீர்மானத்தை மறு பரிசீலனை செய்து மின்சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது தொடர்பான கீழ்கண்ட பொருளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்டுள்ள விபரப்படி தெரு மின்விளக்குகள் மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | தெரு மின்விளக்குகள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்கு | 12679 |
| 2 | 1 x 36 வாட்ஸ் சி.எப்.எல் விளக்கு | 499 |
| 3 | 2 x 36 வாட்ஸ் சி.எப்.எல் விளக்கு | 907 |
| 4 | 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | 521 |
| 5 | 150 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 638 |
| 6 | 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 1600 |
| 7 | 125 வாட்ஸ் மெர்குரி ஆவிவிளக்கு | 84 |
| 8 | 250 வாட்ஸ் மெர்குரி ஆவிவிளக்கு | 325 |
| 9 | 250 வாட்ஸ் மெட்டல் ஹலாய்டு | 265 |
| 10 | 2 x 24 வாட்ஸ் T5 விளக்கு | 36 |
| 11 | 4 x 24 வாட்ஸ் T5 விளக்கு | 186 |
| 12 | 5 x 24 வாட்ஸ் T5 விளக்கு | 459 |
| 13 | 16 மீ உயர்கோபுர மின்விளக்கு | 24 |
| 14 | 20 மீ உயர்கோபுர மின்விளக்கு | 1 |
| 15 | 10 மீ சிறிய கோபுர மின்விளக்கு | 15 |
| | மொத்தம் | 18239 |

மேலும் தற்போது ஒருங்கிணைந்த நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு இயக்கத்திட்டத்தில் 2011-12-ம் ஆண்டிற்கு ரூ.510.00 இலட்சம் செலவில் புதிய தெருவிளக்குகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| வ.எண் | விளக்குகள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 36 வாட்ஸ் சி.எப்.எல் விளக்கு | 850 |
| 2 | 250 வாட்ஸ் மையத்திட்டு விளக்கு | 200 |
| 3 | 250 வாட்ஸ் சாலையோர விளக்கு | 270 |

| | | |
|---|---|---|
| 4 | உயர்கோபுர மின்விளக்கு 16 மீ உயரம் | 7 |
| 5 | உயர்கோபுர மின்விளக்கு 25 மீ உயரம் | 1 |
| 5 | சிறிய கோபுர மின்விளக்கு | 31 |
| | **மொத்தம்** | **1359** |

தற்போது மாநகராட்சியில் பயன்பாட்டில் உள்ள 18239 தெருவிளக்குகளை பராமரிப்பதற்கு ஆண்டுதோறும் மின்கட்டணம் நீங்கலாக சராசரியாக ரூ.155.00 இலட்சம் செலவினம் ஏற்படுவதோடு தெருவிளக்குகளின் மின்சார பயனீட்டுக் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.29.00 இலட்சம் வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.348.00 இலட்சம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலவு ஏற்படுகிறது.

நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்களின் 22.02.12 தேதிய கடிதம் எண்.36321/2011/E1-ல் தெருவிளக்கு பராமரிப்பில் மின்சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு மின்சார செலவினை குறைக்க கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதத்தில் தெருவிளக்குகளை மின்சிக்கன விளக்குகளாக மாற்றியமைத்தல் மற்றும் தெருவிளக்குகளை இயக்குதல் மற்றம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் ஆகியவற்றை சேர்த்து விரிவான பணியாக மேற்கொள்ள ஆலோசனை கூறப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு இயக்க திட்டத்தில் 2011-12ம் ஆண்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள புதிய தெருவிளக்கு அமைக்கும் பணிகளில் தேவையான அளவில் எல்.இ.டி தெருவிளக்குகளை மாநகராட்சி மற்றும் தனியார் பங்களிப்புடன் பொருத்தவும் வலியுறுத்தப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு அரசின் மானியக் கோரிக்கை எண்.34க்கான அறிவிப்புகளில் அறிவிப்பு எண்.23-ல் தெருவிளக்குகளின் எரிசக்தி திறன் சேமிப்பு நடவடிக்கைகள் தலைப்பில் மாநகராட்சிகளில் தற்போது பயன்பாட்டிலுள்ள குழல்விளக்குகளுக்கு (FTL's) பதிலாக எல்.இ.டி (LED) போன்ற ஆற்றல் மிக்க மின்விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு தற்பொழுது அதிகளவில் இருக்கும் 4'-40 வாட்ஸ் குழல் மின்விளக்குகளுக்கு பதிலாக எல்.இ.டி (LED) மின்விளக்குகளாக மாற்றி அமைத்தும் மற்றும் தெருமின்விளக்குகளுக்கான ஸ்விட்சுகளில் Voltage controller உபகரணங்களை பொருத்தும் பட்சத்திலும் மின்பயனீட்டு அளவைக் குறைக்க வாய்ப்பு உள்ளது. அதிலும் குறிப்பாக பிரதான போக்குவரத்து சாலைகளில் போக்குவரத்து குறைவாக இருக்கும் நள்ளிரவு முதல் விடியற்காலை வரை மின்விளக்குகள் எரியும் சக்தியின் அளவை தானாக குறைப்பதற்கான வழிவகையும் மேற்படி உபகரணத்தில் செய்யப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதன்படி தற்பொழுது செலுத்தப்பட்டு வரும் மின் பயனீட்டு கட்டணத் தொகையில் 35 சதவீதத் தொகை சேமிப்பாவதற்கு வாய்ப்புள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு 4' - 40 வாட்ஸ் குழல் மின்விளக்குகளுக்கு பதிலாக எல்.இ.டி (LED) மின்விளக்குகளாக மாற்றுவதன் மூலமும் மற்றும் Voltage Controller உபகரணங்களை பொருத்துவதன் மூலம் மின்பயனீட்டுக் கட்டணத் தொகை குறைவதைக் கண்டறியும் வகையிலும் தற்பொழுது தெருமின்விளக்குகளுக்கான மின்பயனீட்டு அளவுகளை தணிக்கை செய்யும் வகையிலும் ஆற்றல் திறன் செயலகத்தின் மூலம் (Bureau of Energy Efficiency) சான்றிதழ் பெற்ற மின்சக்தி தணிக்கையாளர் மூலம் மின்பயனீட்டு அளவுகளை தணிக்கை செய்வதன் மூலமே மின்பயனீட்டு அளவு குறைவதை கண்டறிய இயலும். மேற்கண்டவாறு மின்பயனீட்டு அளவை தணிக்கை செய்வதற்கு ஆகும் செலவினத் தொகையை தேர்வு செய்யப்படும் நிறுவனமே தன் சொந்த பொறுப்பில் செலுத்த வேண்டும்.

மேலும், மேற்குறிப்பட்டுள்ளவாறு மின்பயனீட்டு அளவு தணிக்கை செய்தால் மட்டுமே கார்பன் கிரடிட் (Carbon Credit) மூலம் அரசிடமிருந்து ஊக்கத் தொகை பெற இயலும். அவ்வாறு கிடைக்கப்பெறும் ஊக்கத் தொகையில் முதல் 5 வருடத்திற்கு 50 சதவீதம் தேர்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு மீதமுள்ள 50 சதவீதம் மாநகராட்சி நிதியில் சேர்க்கப்படும். மீதமுள்ள 5 ஆண்டிற்கு 20 சதவீதம் தேர்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு மீதமுள்ள 80 சதவீதம் மாநகராட்சி நிதியில் சேர்க்கப்படும்.

எனவே ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்தி தெருமின்விளக்குகளுக்கு செலுத்தப்பட்டு வரும் மின்பயனீட்டுக் கட்டணத்தை குறைப்பதற்கு இத்துறையில் நன்கு அனுபவம் வாய்ந்த தனியார் நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளபட வேண்டியுள்ளது.

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மின் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ள தற்போதுள்ள 4'-40 வாட்ஸ் குழல் மின்விளக்குகளை எல்.இ.டி மின்விளக்குகளாக மாற்றியமைக்கவும், மின் விளக்குகளுக்கான சுவிட்சுகளில் Street light Controller Unit மற்றும் Voltage controller உபகரணங்களை வழங்கி பொருத்தி இயக்கி பராமரிப்பதற்கும் ஆகும் உத்தேச செலவினத் தொகை பற்றிய விவரம் பின்வருமாறு.

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை | ஒன்றின் விலை (ரூபாயில்) | மொத்த செலவினத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | 4'-40 வாட்ஸ் குழல் விளக்குகளை 20 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகளாக மாற்றுதல் | 12679 | 5980.00 | 75820420.00 |
| 2 | தெருவிளக்கு கட்டுப்படுத்தும் கருவி (Street light Controler Unit) LED மின் விளக்குகளுக்கு மட்டும் | 500 | 17500.00 | 8750000.00 |
| 3 | வோல்டேஜ் கன்ட்ரோலர் உபகரணம் | 66 எண்ணிக்கை மும்முனை மின்இணைப்பு | 108000.00 | 7128000.00 |
| | | 1113 எண்ணிக்கை ஒரு முனை மின் இணைப்பு | 43000.00 | 47859000.00 |
| 4 | தனிப்பட்ட தெருவிளக்கு கண்காணிப்பு சாதனம் (Individual Lamp Monitoring Device) | 1856 | 6480.00 | 12026880.00 |
| 6 | இணையதள கண்காணிப்பு மையம் அமைப்பதற்கான செலவினம் (Centralized monitoring station) | 1 | 1567000.00 | 1567000.00 |
| | **மொத்தம்** | | | **153151300.00** |

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட உள்ள தெருவிளக்குகளுக்கும், அந்த மின் விளக்குகளுக்கான சுவிட்சுகளில் வோல்டேஜ் கன்ட்ரோலர் உபகரணங்களை வழங்கி பொருத்தி இயக்கி பராமரிப்பதற்கும் ஆகும் செலவினத் தொகை பற்றிய விவரம் பின்வருமாறு.

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை | ஒன்றின் விலை (ரூபாயில்) | மொத்த செலவினத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | புதிய 20 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் பொருத்துதல் | 850 | 5980.00 | 5083000.00 |
| 2 | புதிய 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்துதல் | 670 | 7000.00 | 4690000.00 |
| 3 | தெருவிளக்கு கட்டுப்படுத்தும் கருவி (Street light Controler Unit) LED மின் விளக்குகளுக்கு மட்டும் | 85 | 17500.00 | 1487500.00 |
| 4 | வோல்டேஜ் கன்ட்ரோலர் உபகரணம் | 42 எண்ணிக்கை மும்முனை மின்இணைப்பு | 108000.00 | 4536000.00 |
| | | 31 எண்ணிக்கை ஒரு முனை மின் இணைப்பு | 43000.00 | 1333000.00 |
| 5 | தனிப்பட்ட தெருவிளக்கு கண்காணிப்பு சாதனம் (Individual Lamp Monitoring Device) | 175 | 6480.00 | 1134000.00 |
| | **மொத்தம்** | | | **18263500.00** |

**செலவின சுருக்கம்**

| | | |
|---|---|---|
| (i) தற்போதுள்ள 40 வாட்ஸ் தெருவிளக்குகளுக்கு பதிலாக எல்.இ.டி. விளக்குகள் பொருத்துதல் மற்றும் வோல்டேஜ் கன்ட்ரோலர் முதலான உபகரணங்கள் பொருத்துதல் | - | 153151300.00 |
| (ii) ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்க திட்டம் 2011-12-ல் அனுமதியளிக்கப்பட்ட பணிகளில் புதிய எல்.இ.டி. சோடியம் ஆவி விளக்குகள் பொருத்துதல் மற்றும் புதிய தெருவிளக்குகளுக்கு வோல்டேஜ் கன்ட்ரோலர் முதலான உபகரணங்கள் பொருத்துதல் | - | 18263500.00 |
| | | 171414800.00<br>அல்லது<br>171500000.00 |

மேற்குறிப்பிட்டுள்ள தற்போதுள்ள மற்றும் புதிய தெருவிளக்குகளுக்கு மின்சிக்கன விளக்குகள் மற்றும் வோல்டேஜ் கன்ட்ரோலர் முதலான உபகரணங்கள் பொருத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 1715.00 இலட்சம் தேர்வு செய்யும் நிறுவனத்தால் செலவிடப்படும். மேலும் வோல்டேஜ் கன்ட்ரோலர் முதலான உபகரணங்களை பொருத்தி இயக்கும் பொழுது மின்சேமிப்பு தொகை குறைந்தபட்சம் 35 சதவிகிதத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில் தேர்வு செய்யப்படும் நிறுவனத்தால் செலவிடப்படும் தொகையை கீழ்கண்டவாறு வழங்கிட தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | வருடம் | வழங்கப்படும் தொகை |
|---|---|---|
| 1 | செயல்படுத்தும் ஆண்டு<br>a. பொருட்கள் வழங்கப்பட்ட பின் | 25% முதலீடு தொகை |
| | b. பொருட்கள் பொருத்தி இயக்கப்பட்ட பின் | 25% முதலீடு தொகை |
| 2 | முதலாண்டு இறுதி | மீதமுள்ள 50% முதலீடு தொகையில் 12.5% முதலீடு தொகை மற்றும் 50% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை |
| 3 | இரண்டாம் ஆண்டு இறுதி | மீதமுள்ள 37.5% முதலீடு தொகையில் 12.5% முதலீடு தொகை மற்றும் 37.5% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை |
| 4 | மூன்றாம் ஆண்டு இறுதி | மீதமுள்ள 25.0% முதலீடு தொகையில் 12.5% முதலீடு தொகை மற்றும் 25% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை |
| 5 | நான்காம் ஆண்டு இறுதி | மீதமுள்ள 12.5% முதலீடு தொகை மற்றும் 12.5% முதலீடு தொகைக்கான 8% வட்டி தொகை |

மின்சேமிப்பு தொகை 35 சதவீதம் கிடைக்காத பட்சத்தில் மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு வருடமும் இறுதியில் 12.5 சதவீத தொகையினை தேர்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு மாநகராட்சி திரும்ப செலுத்த வேண்டியதில்லை.

மேலும் தேர்வு செய்யப்படும் நிறுவனம், ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மின்விளக்குகளையும் பராமரித்து எரியாத மின்விளக்குகளை மாற்றி எரியவிடுதல், பழுதடைந்த இதர மின் உபகரணங்கள் மற்றும் மின்வடங்கள் போன்றவைகளை மாற்றியமைத்தல் ஆகிய பராமரிப்பு பணிகளுக்கு தேவையான அனைத்து மின்உபகரணங்களையும் தம் சொந்த செலவில் வாங்கி தன் சொந்த பொறுப்பில் பொருத்தி அதற்கு தேவையான ஏணி பொருத்தப்பட்ட வாகனத்திற்கான செலவினம் (எரிபொருள் உட்பட) ஓட்டுனர் ஊதியம் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள், மின்கம்பி உதவியாளர்கள் போன்றவர்கள் பணி புரிவதற்கான ஊதியம் வழங்குதல் மேலும் இதன் தொடர்புடைய அனைத்துப் பணிகளையும் இணையதளம் மூலம் கண்காணிக்கத் தேவையான கணினி அதன் தொடர்புடைய இதர உபகரணங்கள் அதனை இயக்குவதற்கான கணினி இயக்குபவர் அதற்குண்டான செலவினம் மற்றும் பணிபுரிபவர்களுக்கு தேவையான இன்சூரன்ஸ் மற்றும் தொழிலாளர் வைப்பு நிதி போன்ற அரசு விதிமுறைகளுக்குட்பட்ட அனைத்தையும் தனது சொந்தப் பொறுப்பில் ஏற்று பராமரித்துக் கொள்ள வேண்டியது. மேற்கண்டுள்ளவாறு தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் மூலம் பராமரிக்கும்பொழுது பராமரிப்பிற்கான செலவினம் ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறப்பட்டு தேர்வு செய்யப்படும் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்படும். மின்கட்டணம் மாநகராட்சி மூலம் செலுத்தப்படும். இப்பராமரிப்பு 10 வருட காலத்திற்கு மேற்கொள்வதால் பராமரிப்பு மேற்கொள்வதன் தொகையில் வருடத்திற்கு 15 சதவீதம் சேமிப்பதால் மாநகராட்சிக்கு கூடுதல் சேமிப்பு ஏற்படுகிறது.

எனவே மேற்குறிப்பிட்டுள்ளவாறு தெருமின்விளக்குகளுக்காக தற்போது மின்சார வாரியத்திற்கு செலுத்தப்படும் மின் பயனீட்டு அளவை குறைக்கும் நோக்கில் மாநகராட்சிக்குட்பட்ட தற்போதுள்ள 4'-40 வாட்ஸ் குழல் விளக்குகளுக்கு பதிலாக 20 வாட்ஸ் எல்.இ.டி. மின்விளக்குகளை பொருத்திடவும், ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு இயக்கத் திட்டத்தில் தெருவிளக்கு பணியில் 36 வாட்ஸ் சி.எப்.எல். மின்விளக்குகளுக்கு பதிலாக 20 வாட்ஸ் எல்.இ.டி. மின்விளக்குகளை பொருத்திடவும், மையத்திட்டு மற்றும் சாலையோர தெருவிளக்குகளுக்கு தேவையான 250வாட்ஸ் மின்விளக்குகளை பொருத்தவும் மின்பயனீட்டு அளவை குறைப்பதற்கு தெருவிளக்கு சுவிட்சுகளில் வோல்டேஜ் கன்ட்ரோலர் முதலான உபகரணங்களை தேர்வு செய்யப்படும் நிறுவனம் மூலம் வழங்கி பொருத்தி இயக்கி பராமரிக்கவும், மற்றும் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பயன்பாட்டில் உள்ள தெருவிளக்குகளில் எரியாத தெருவிளக்கினை மாற்றி அதன் தொடர்புடைய இதர மின்உபகரணங்களையும் புதிதாக மாற்றியமைத்து எரிய விடும் பணிகளையும் 10 ஆண்டுகளுக்கு தேர்வு செய்யப்படும் தனியாரிடம் உரிய கட்டணம் செலுத்தி பராமரிக்கலாம்.

மேலும் மாநகராட்சி மூலம் 10 ஆண்டுகளுக்கு தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மின்கட்டணம், பணியாளர் ஊதியம், உதிரிபொருட்கள், வாகனம் மற்றும் டீசல் செலவு உட்பட உத்தேசமாக ரூ.80.16 கோடி செலவாகும். அதே சமயம் தனியார் மூலம் மின்சிக்கன கருவிகளை பொருத்தி தெருவிளக்கு பராமரிப்பினை முழுமையாக 10 ஆண்டுகளுக்கு மேற்கொள்ள மின்சேமிப்பு உட்பட உத்தேசமாக ரூ.74.15 கோடி செலவாகும் என தெரிகிறது. ஆகவே தனியார் மூலம் 10 ஆண்டுகளுக்கு தெருவிளக்கு பராமரிப்பினை மேற்கொள்ளும்பொழுது ரூ.6.01 கோடி செலவு குறைய வாய்ப்பு உள்ளது. எனவே மேற்கண்ட பொருளை பரிசீலித்து முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அன்னாரின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/2249/2012**

**171. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அவர்களின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.**
**54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் ஜா. சபுராமாமின்ஹாஜ் அவர்கள் ஆட்சேபனை செய்தார்.**

**இடம்- ஈரோடு** **மேயர்,**
**நாள்-01.08.2012** **ஈரோடு மாநகராட்சி**